

# அருள்மிகு
# கப்புதூ காட்டுக்கந்தன்
# திருக்கோயில்

# சித்திரத்தேர்
# வெள்ளோட்ட மலர்
## 22.05.2002



உ

# அருள்மிகு
# கப்புது
# காட்டுக் கந்தன்
# திருக்கோயில்

# சித்திரத்தேர்
# வெள்ளோட்ட
# மலர்

22. 05. 2002



உ



அருவமு முருவுமாகி யனாதியாய் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர்முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு தித்தனன் உலகமுய்ய.


UNIE ARTS

உ

# ஆசிச் செய்தி

*கரணவாய் தெற்கு, கப்புது நுணுப்பாவளை என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டு அடியார்கட்கு ஏற்படும் அல்லல், துயர், துன்பம் களைந்து அருட் பிரவாகம் செய்யும் கலியுகத் தெய்வமாகிய இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தியுடன் பொருந்திய வள்ளி தேவசேனா சமேத காட்டுக்கந்தன் என வழங்கும் முருகப் பெருமானுக்குக் கலைச் சிறப்புமிக்க சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய இரதம் செய்யப் பெற்று இரதோற்சவம் நடைபெற இருப்பது மிகவும் சிறப்பும் பெருமையும் அருளும் நிறைந்த வைபவமாகும். மெய்யடியார்கள் அறப் பெரும் பணியால் ஆக்கம் செய்த திருத்தேரில் கலியுக வரதப் பெருமான் ஆரோகணித்திருந்து சகல புவனங்களையும் கடந்து உலா வரும் திருக்கோலக் காட்சியானது வையம் ஊர்தி என்னப் பெருமை மிக்க உற்சவமாக நிறைவு பெறும். அன்பர்கள் அடியார்கள் துன்பம், துயர், மனோபயம் ஆகியவை நீங்கிச் சிறப்பான நல்வாழ்வு பெற வேண்டித் திரு முருகன் திருமலர்ப் பாதம் பணிந்து எமது பிரார்த்தனையையும் அன்பையும் முருகப் பெருமான் திருவடி மலரில் நினைந்து சமர்ப்பித்துச் சகல நலன்களுடன் விழாச் சிறப்புற ஆசி கூறுகிறேன்.*

*"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"*

சுபம்

**பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்**
*பிரதிஷ்டா சிரோன்மணி, கிரியாகிரமஜோதி*
*பிரதிஷ்டா கலாநிதி, சுவானுபூதி, சிவாச்சார்ய சக்கரவர்த்தி.*

உ

# ஆசியுரை

"பக்தஸ்ய ய: கார்த்திகேயே காகுத்ஸ்த்த புவிமாநவஹ
ஆயுஷ்மான் புத்ரபௌத்ரைஸ்ச ஸ்கந்த ஸாலோக்யதாம் வ்ரஜேத்"

இது ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு விஸ்வாமித்ர ரிஷி கந்தவேள் பெருமானது அவதார மகிமைகளைக் கூறியபின் கூறிய வசனமாகும்.

ராமா! இப்பூவுலகில் எவன் கார்த்திகேயனிடத்துப் பக்தி செலுத்துகிறானோ அவன் தீர்க்காயுளுடன் புத்ர பௌத்திராதிகளோடு சகல சுகங்களோடு வாழ்வான். இவ்வுடலை நீத்ததும் அவன் ஸ்கந்த லோகத்தில் அமைவான் என்பதே பொருள்.

கலியுகவரதன் கந்தனிடம் பக்தி செலுத்த வேண்டுமெனில் நாம் அவரிடம் சரணடைந்து, அவன் புகழ்பாடி மெய்யுருகி அவரது கீர்த்திகளைப் பிரவாகம் செய்ய வேண்டியதவசியம். இந்த வரிசையில் கந்தனது மகோற்சவம் மிக மிக அவசிய தரிசனமானது. தேரேறி வரும் முருகப் பெருமானது தேரின் வடங்களைப் பிடித்திழுத்து எட்டுத் திக்குகளிலும் அவர் எண்திசைகளை உன்னிப்பாகப் பார்க்கும் போது அப்போதெல்லாம் எம் பெருமானது கற்பூர ஆராதனையைக் கண்டு தரிசிப்பவன் மனிதன், தெய்வமாகவும் மாற முடியும். மனிதனைப் பற்றி நிற்கும் அறியாமையும் விலகும். ஸ்ரீருத்ரத்தில் இறைவனே ரத ரூபமாகவும், ரதத்தை சாரதித்துவம் செய்யும் அரசனாகவும், அதிலிருந்து அருள் செய்பவனாகவும் விளங்குகிறார் என அறியக் கிடக்கிறது.

எனவே சைவ சமயத்தில் ரதோற்சவம் மகோற்ஸவத்தின் உயிர் நாடியாக விளங்குவதால்தான், தற்காலங்களில் மிலேச்சவாதிகளதும் தத்தம் சமய போதனைகளில் நம்பிக்கையீனங் கொண்டு சைவாலயத் தேர் விழாக்களில் கலந்து கொண்டு, தத்தம் இஷ்ட சித்திகளையும் பெறுகின்றனர்.

எமதறிவுக்கெட்டாத விஷயங்கள் ஏராளம், ரதோற்ஸவத்தில் இணைத்திருக்கிறது. பிரபஞ்சவுற்பத்தியின் சாரம்ஸங்கள் ரதத்தின் மூலம் வெளிக் கொணரப்படுகின்றது. பேரின்ப நிலைக்கு மனிதனை உயர்த்தி, இறைவனது சான்னியத்தில் இணைய ரதோற்ஸவக் கிரியைகள் உதவுகின்றன. இது சைவ உலகிற்குக் கிடைத்த பெருஞ் செல்வம்.

கப்புதூக் காட்டுக் கந்தன் ஆலயம் தொன்மையானது. பரதேசிப் பறங்கியர் சைவாலயங்களை இடித்துத் துவம்சஞ் செய்து சைவ கலாசாரப் பண்புகளை அழித்து, சிவமயமானவர்கட்கு இடையூறு செய்தும், ஈற்றில் கப்புதூ முருகனடியார்களும் கூட மௌனாஞ்சலி செய்து முருக தரிசனத்தை இதயத்தால் தரிசித்து வாழ்ந்தமையினாற்தான் இன்று எம்பெருமானுக்குத் தேர் யெது வெள்ளோட்டம் இடம் பெற வசதியானது. இதுவும் திருவருட் துணையே. கப்புதூக் காட்டுக் கந்தனது மகிமை ஞாலமெலாம் பரவி முருகனது திருவருள் எங்கும் சொரிந்து மக்கள் அனைவரும் இன்புற்று வாழ இந்நன்நாளில் யானும் முருகனை நினைந்து பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனம்

# ''தேர் தெரிகிறது''

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. ஆலயத்தில் அருளை மிகுவிக்கும் சாதனங்களுள் சித்திரத் தேரும் ஒன்று. தெய்வம் தேரேறச் செய்த தீவினைகள் மறைந்து விடும்.

கப்புதூக் காட்டுக் கந்தசுவாமி ஆலயத்திற்கு ஒரு சித்திரத் தேர் அவசியம் என்று அடியார் உள்ளத்தில் முகிழ்த்த அரும்பு இன்று மலராகி மணம் பரப்பத் தொடங்கி இருக்கிறது. ஆறுமுகன் அறுகோணத் தேரில் பவனிவரும் காட்சியைக் கண்டு களிக்கும் பாக்கியம் எம்மவர்க்குக் கிடைப்பதுடன் தத்துவ ரீதியாகச் சாம்பவி தீட்சையைப் பெறுவதற்கும் மும்மல நீக்கத்திற்கும் வகை செய்கிறது.

தெய்வீகக் கலையைச் சித்திரத் தேர் மூலம் வடித்துத் தருகின்ற "பாலச்சந்திரன்" என்னும் சிற்பாசாரி பெருமை பெறுவதுடன் ஆலயத்தையும் பெருமைக்குள்ளாக்கி இருப்பது எம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது.

செயற்கரிய இச் செயலைச் செய்ய முன்னின்றுழைத்தோர் தம்மாலியன்ற நன்கொடைகள் வழங்கியோர் உள்ளத்தால் உவந்தோர் உருவாக்கிய சிற்ப ஆசாரியர் அவரது குடும்பத்தினர் காட்டுக் கந்தன் அருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

**பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள்**
*பிரதம சிவாச்சாரியார்*
*அருள்மிகு காட்டுக்கந்தன் தேவஸ்தானம்*

# வாழ்த்துச் செய்தி

கரணவாய் தெற்கு, கப்புதூ நுணுப்பாவளைக் கந்தசாமி கோயிலில் புதியதாகத் தேர் ஒன்று அமைக்கப்பட்டு அதன் வெள்ளோட்டம் எதிர்வரும் 22.05.2002 அன்று நடைபெற இறைவனது திருவருள் கூட்டியுள்ளது என அறிந்து அவனது திருவருளால் இந்நிகழ்வு இனிதே நிறைவேறப் பிரார்த்திக்கின்றோம்.

இறை வழிபாட்டையே வாழ்க்கையின் பெரும் பயனாகக் கொண்டு வாழ்ந்த ஞானியர் பலர் தோன்றிய பெருமை எமது சமயத்திற்கு உண்டு. அவர்களது இறை வாழ்க்கையின் தாக்கத்தால் இன்றும் எமது சமயம் உயிரோட்டம் நிறைந்ததாக உள்ளது. அவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையில் செல்பவர்கள் வாழ்க்கையின் நிறைவை எய்துவர் என்பதில் ஐயமில்லை.

கோயிலில் குடிகொண்டுள்ள இறைவன் கற்சிலையல்ல, அது இறைவனின் சிற்சொரூபமே என்ற உணர்வுடன் இறைவனை வழிபட்ட எமது ஞானியர் காட்டிய வண்ணம் நாமும் இறைவனை வழிபடத் தெரிந்து கொள்வோம். அத்தகைய உணர்வுடன் கோயிலுக்குச் செல்வோர் அங்கு இறை சான்னித்தியத்தை எளிதில் உணர்வர். இறை வழிபாட்டின் அடிநாதமாக விளங்குவது மனத்தூய்மையும் பக்தியுமே.

கந்தசாமி கோயில் தேர் வெள்ளோட்ட நிகழ்வு மக்கள் மனதில் இறையுணர்வை வளர்க்க இறையருள் துணை நிற்பதாக !

மெய்யடியார்களுக்கு எமது வணக்கங்கள் உரித்தாகுக!

சுவாமி ஆத்மகணானந்தஜி
இராம கிருஷ்ண மடாலயம்
கொழும்பு

உ
சிவமயம்

# அருளாசிச் செய்தி

கப்புதூக் காட்டுப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். நாங்கள் வாழும் யுகத்தைக் கலியுகம் என்பர். யுகத்தின் தலைவனாக இருப்பவன் முருகப் பெருமான். முருக வழிபாடு இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தைத் தரக்கூடியதாகும்.

மனித வாழ்வின் உயர் நிலையைத் தரக்கூடியது இறை வழிபாடாகும். அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்களாகும். ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளும் விழாக்களும் மனிதன் சிந்தித்துச் செயல்பட வழிகாட்டுகின்றன.. அதற்காகவே ஆலயம் தொழுவது சாலமும் நன்று. நித்தலும் எம்பிரான் கோயில் புக்கு என்றும் எடுத்து இயம்பி உள்ளனர். இதனை உணர்ந்தக் கப்புதூ மக்கள் முருகனுக்கு ஆலயம் அமைத்து ஆலய வழிபாட்டில் தனித்துவமான தேர்த் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பல லட்சம் ருபா செலவில் புதியதொரு தேரை உருவாக்கி உள்ளனர். தேர்த் திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆன்மாக்களைப் பற்றி இருக்கும் மாயை இருளை அகற்றி ஞான ஒளியை ஏற்றுவதாகும். அதனாலே தேர் வடம் பிடித்தால் வானத்தில் இடம் பிடிக்கலாம் என்று முன்னோர் இயம்பினர். தேரினுடைய அமைப்புப் பல தத்துவங்களை எமக்கு உணர்த்துகிறது. தேரினுடைய அமைப்புப் பாதாளத்தையும் பூலோகத்தையும் மேலோகத்தையும் காட்டுவதாகும். உடம்பை மூன்றாகப் பிரித்தனர். கால், அரை, தலை என்று. தேருக்கும் மூன்று பாகங்கள் உள்ளன. இறைவன் தேரில் எழுந்தருளச் செய்வது மனிதனின் மனதில் இறைவனை எழுத்தருளச் செய்வதாகும். இதனாலேயே தேர்த் திருவிழா சிறப்புடையது. இத்தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞனை வாழ்த்துகின்றோம். இத்தேருக்கு நிதி வழங்கியவரையும் ஆலய பரிபாலன சபையினரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. இவ் வெள்ளோட்டத்தை நிதர்சனமாக்க வெளிவரும் மலர் சிறப்பாக அமைந்து எல்லோருக்கும் பயன்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
*இரண்டாவது குரு மகா சந்நிதானம்*

உ
சிவமயம்

# ஆசிச் செய்தி

சைவத் திருக்கோயில்களில் மகோற்சவம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் சிறப்பு விழா இதுவாகும். இவ்விழாவில் இரதோற்சவம் திரளான பக்தர்களுக்கு அருட்காட்சியைத் தேரிலே வைத்து இறைவன் அருள்கின்ற ஒரு முக்கிய நிகழ்வாகும். பஞ்ச கிருத்தியங்களில் சங்காரத் தொழிலை உணர்த்தி நிற்பது இரதோற்சவமே. இவ்வுற்சவத்துக்கான இரதம் என்கின்ற தேரை உருவாக்கி அதனை ஓடவிட்டு வெள்ளோட்ட விழா முதலில் கண்டு இறும்பூது அடைகின்றார்கள் பக்தர்கள். அந்த வகையில் கப்புதூ நுணுப்பாவளைக் கந்தசாமி கோயில் தேர் வெள்ளோட்டத்தைக் காண இருப்பது மகிழ்ச்சியான நிகழ்வாகும். இத்திருப்பணியைப் புத்தூர் ஸ்தபதி திரு. செ. பாலச்சந்திரன் அவர்கள் நிறைவேற்றி இருப்பது பாராட்டுக்குரியது. இந்த மண்ணில் தேர்த் திருப்பணிகள் பலவற்றைச் செய்து முடித்து அனுபவம் பெற்றவர் பாலச்சந்திரன் ஸ்தபதி ஆவர். இவருடைய கைவண்ணமும் கருத்து வண்ணமும் இத்திருப்பணியில் சிறப்பான முன்னிடத்தைப் பெறுகிறது. கரணவாய்க் கப்புதூ மக்களின் அயராத பக்தியும் கந்தப் பெருமானின் திருவருளும் ஒன்றாகச் சேர்ந்து தேர் வெள்ளோட்ட விழாவைக் காண வைக்கிறது என்பது வெள்ளிடை மலை. எனவே கலியுகத்துத் தெய்வமாகிய கந்தவேளைச் சரணடைந்து அனைவரும் பேரானந்தம் அடையப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
*சமாதான நீதிபதி*
*தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா*

உ

# அருள்புரிந்து காப்பாய் போற்றி

திருவளரும் கரணவாய்க் தென்பால் தெய்வச்
சீர்வளரும் காட்டுநடுத் தலத்தே போதித்
தருவளரும் நீழலிலே கோயில் கொண்ட
சரவணப வானந்தக் கந்தா, நின்றன்
உருவளரும் தேரேறி, மக்கள் எல்லாம்
உளம்வளரும் சமாதானம் பெருகி வாழ
குருவளரும் குமரனாய்க் காட்சிதந்து
கொடைவளரும் வரம்தருவாய் போற்றி போற்றி

செப்புநலச் சீரடியார் தொண்டர் மற்றோர்
சேர்ந்தமைந்த மணித்தேரில் கரணவா யூர்
கப்புதூப் பதிசிறக்க வள்ளி தெய்வி
கணவனாய் வீதிவரும் வெற்றி வேலா,
ஒப்புமனத் தொண்டடியார், தேரமைத்தோர்
உதவிபல புரிந்தவர்கள், தோத்தரிப்போர்
எப்போதும் கலை செல்வம் சுகம் சிறக்க
இணையடியின் அருள்புரிந்து காப்பாய் போற்றி

சுபம்

அருட்கவி சீ. வினாசித்தம்பி
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

*விராட் விஸ்வப் பிரமனே நம*

# ஆசிச் செய்தி

திருவருள் சொரியும் கப்புதூ முருகப் பெருமானுக்கு அந்திர மரபு முக பத்திர சிற்பத் தேர் நிர்மாணித்து வெள்ளோட்டம் விடுவதில் எமது சிற்பாலயம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது. அழகுத் தெய்வமாகிய முருகனுக்கு அழகும் கலையம்சமும் மிளிரும் அறு கோணமும், பன்னிரண்டு வாசல்களையும் கொண்ட முகபத்திரத் தேர், ஸ்ரீ காளிகா சிற்பாலயத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப்பெரும் தெய்வீகத் தர்ம கைங்கரியத்தைச் செய்வித்த குக ஸ்ரீ தாமோதரம்பிள்ளை ஐயா அவர்கட்கும் அவர் குடும்பத்தினருக்கும், தேர் நிர்மாணிப்பதில் இரவு, பகல் கண் அயராது உழைத்த கலைஞர் குழாத்துக்கும், முருகனின் திருவருள் துணை என்றும் உண்டு என்று வணங்கி வாழ்த்துகின்றேன்.

**விஸ்வப் பிரம்ம ஸ்ரீ**
**செ. பாலசந்திரன் ஆச்சாரியார்**
***ஸ்ரீ காளிகா சிற்பாலயம்***

உ
சிவமயம்

# உளம் மகிழ்ந்தாடிடக் கந்தன் தேரோட்டும்

ஈழ நாட்டின் வடபுலத்தின் வடமராட்சி மண்ணின் புகழின் பங்கான கரணவாய் என்னும் கிராமத்தின் கப்புதூ என்னும் ஆன்மீகச் சூழலில் அமைந்துள்ளதுதான் எமது முருகன் ஆலயம். இவ்வாலயத்தை நுனுப்பாவளைக் கந்தன் என்றும் காட்டுக் கந்தன் என்றும் இரு வேறு செல்லப் பெயரால் அழைப்பார்கள்.

இவ்வழகிய ஆலயத்தின் அற்புதங்கள் பற்பலவானவை. கருணையுடன் அருள்பாலித்து வரும் எம் முருகப் பெருமானுக்கு ஓர் அழகிய திருத்தேரைத் தேர் உபயகாரர்கள் அமைத்து வெள்ளோட்டம் என்னும் பெரு நிகழ்ச்சி நடைபெறுவதையிட்டு நாம் எல்லாம் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். எமது சைவ ஆலய விழாக்களிலே தேர்த் திருவிழா என்பது அழித்தல் தொழில் ஆகும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மாயையை நீக்கி ஞான ஒளியை ஏற்படுத்தும் விழாவாகும். அதனாலேயே தேரில் வடம் பிடித்தால் வானத்தில் இடம் பிடிக்கலாம் என்பார்கள். இம் மகிமைகளின் பால் எம்மைக் காக்கும் முருகப் பெருமானுக்கு இது கைகூடியிருப்பதால் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இவ்வெள்ளோட்டத்தில் மந்திரங்கள் ஒலித்தவண்ணம் மணியோசை ஒலிக்க எம்பெருமான் உலாவருவதைக் காணும் கண்கள் பயனுள்ள கண்கள், வாழ்த்தும் வாய்கள் பயனுள்ளவாய்கள் என்று வாழ்த்தி இத்தெய்வீகப் பணி இனிது நிறைவேற உழைத்த முருகனடியார் வணக்கத்துக்குரிய ச. தாமோதரம்பிள்ளை அவர்களை எம்முருகப் பெருமானின் நிலையான திருவருள் என்றும் கிடைக்க வேண்டும் எனவும் அவர்கள் மென்மேலும் இது போன்ற திருத் தொண்டுகளில் ஈடுபட்டுப் பேரானந்த வாழ்வு வாழ வேண்டும் என்றும் எங்கள் எல்லாம் வல்ல நுணுப்பாவளை முருகப் பெருமானை வேண்டி வணங்கி அமைகிறோம்.


இளையதம்பி கதிரிப்பிள்ளை
*தலைவர்*
*அருள்மிகு காட்டுக்கந்தன் தேவஸ்தானம்*

# ''சித்திரத் தேரேறும் சிங்கார வேலன்''

குன்றிருக்கும் இடமெல்லாம் குகன் இருப்பான். அடியவர் உள்ளக் குகையிலும் இருப்பான். குறிஞ்சிக் கந்தன் நெய்தற் பதியாம் செந்தூரில் அமர்ந்தது ஏன்? தேவர் துயர்தீர்க்க வந்த சேவகன் கப்புதூவுறை அடியரைக் காக்க இன்று தேரேறி வருவது யார் செய்த மாதவமோ, பக்தி வலைவீசிப் பண்போடு வாழ்வை இட்டுச் செல்லும் பெரியோர்கள் நிறைந்த ஊர், மயிலேறி தங்கிய ஊர், தேவரூரினும் மேன்மை சிறந்த ஊர் இவ்வூர்.

இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு மேலான பழமையும், தெய்வீகமும், அற்புதமும் நிறைந்தது காட்டுக் கந்தன் ஆலயம். ஆலயத் திருப்பணி வேலைகள் அற்புதமானவை. கண்ணொடு கருத்தைக் கவர்ந்து பத்திக்கு வித்தாகிக் கந்த முத்திக்கு வழிகாட்டும் அமைதியான ஆலயம், ஆன்ம லயம் அடையச் செய்யும் ஆலயம்.

ஆலய விழாக்களுள் அதி உன்னதமானது தேர்த் திருவிழா, தீர்த்தோற்சவத்தின் முதனாள் நடைபெறும். இவ்விழா உயர்ந்த உன்னதமான தத்துவங்கள் பலவற்றை உள்ளடக்கியது. தெய்வங்கள் தேரேறியதை வரலாறு காட்டும். முல்லைக்குத் தேரீந்து எல்லையில் புகழ்படைத்தான் வள்ளல் பாரி. இன்று காட்டுக் கந்தனுக்கு சபாபதிப்பிள்ளை மகன் தாமோதரம்பிள்ளை குடும்பத்தினர் நிலையற்ற செல்வத்தால் நிலையான பணியாகப் புதியதோர் சித்திரத் தேர் கொடுத்து, தேரோடும் வீதியெல்லாம் ஆறுமுகம் பொழி கருணை வெள்ளத்தில் அன்பர்களை நனைய வைத்து தாம் பெற்ற இன்பத்தை ஏனையோரும் அடைய வழிகாட்டும் தேர்ப்பணியே பணி. இப்பணி வளரட்டும் - தொடரட்டும்.

22-05-2002ல் சித்திரத் தேர் ஓடட்டும்; மணி ஒலி திக்கு எட்டும் பரவட்டும், ஆன்ம ஆணவம் அழியட்டும்; கந்தனின் அருளாட்சி பொலியட்டும். திருக்கைவேல் போற்றி போற்றி.

சுபம்

**சி. வேலாயுதம் (அதிபர்)**
*சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்*
*திருத்தணி - வதிரி*
*கரவெட்டி*

உ

# பிரதேச செயலரின் ஆசியுரை

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பர். ஆலயங்கள் ஆன்மாக்களைப் பரமாத்மாவிடம் ஆற்றுப்படுத்துபவையாகவும் அறநெறி, கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றைப் பேணுபவையாகவும் விளங்குகின்றன. இவ்வாலயங்களில் நடைபெறும் பூஜைகள், மகோற்சவங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குகின்றன. மகோற்சவங்களில் ரதோற்சவம் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

ஆன்மாக்கள் மும்மல பந்தத்திற் கட்டுண்டு கிடக்கின்றன. அவற்றைப் பக்குவப்படுத்தி ஈடேற்றி இறைவன் திருவடி நிழலைச் சென்றடைய வைப்பதற்கு ஆலயங்கள் வழிகாட்டுகின்றன. அங்கே நடைபெறும் உற்சவங்கள் இதிற் பெரும்பங்கு வகிக்கின்றன. உண்மையை - இறைவனை - தேர் அல்லது அறிந்து கொள் என்பதுதான் தேர்த்திருவிழாவின் தாற்பரியமாகும். எமது மும்மலங்களும் இறைவனால் அழித்தொழிக்கப்படுவதை இவ்விழா புகட்டி நிற்கிறது.

கண்ண பரமாத்மா அர்ச்சுனனின் தேர்ச் சாரதியாக விளங்கினார் என்றால் இவ் ஆன்மாக்களை நெறிப்படுத்தினார் என்பதையே அது குறித்து நிற்கும்.

எமது பிரதேசத்திற் புகழ் பெற்ற திருத்தலங்களில் கப்புது நுணுப்பாவளைக் கந்தசுவாமி கோவிலும் ஒன்றாகும். தொண்டைமானாற்றுக் கடலேரியாற் சூழப்பட்டு நெல் வயல்கள் நிறைந்த பிரதேசத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. அந்நியர் ஆட்சிக் காலத்திற் பல பாதிப்புகட்கு உட்பட்ட இவ்வாலயம் இறைவன் திருவருளால் மீண்டு பிரபல்யம் அடைந்தது. அத்துடன் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து ஆலயமும் அதன் சுற்றாடலும் பாதுகாக்கப்பட்டுள்ளதை நோக்கின் இறைவனின் மகிமை புரியும்.

ஆலய உற்சவ காலங்களில் அடியார்களின் ஆன்மீகப் பசிக்கு விருந்தளிப்பது மாத்திரமன்றி அவர்களின் வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக அன்னதானமும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. சில திருவிழா நாட்களில் கலந்து கொண்டு இறைவன் திருவருளைப் பெறும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைக்கப் பெற்றது. ஆலயச் சுற்றாடலில் உள்ள கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் பணியிலும் ஆலயம் ஈடுபட்டுள்ளது.

இத்தகைய சிறப்புமிகு ஆலயத்திற்கென ஒரு தேர் இல்லாத குறை இருந்து வருகின்றது. இதனை உணர்ந்த இறையடியார்கள் சித்திரத்தேர் அமைக்கும் பணியில் ஈடுபடுள்ளார்கள். இத்திருப்பணி நிறைவேறிச் சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெற இறையருள் பாலித்துள்ளது. இவ்விறை கைங்கரியத்தில் ஈடுபட்ட மெய்யடியார்கட்கும் சிற்பாச்சாரியார்கட்கும் வெள்ளோட்ட நிகழ்வில் கலந்து கொள்பவர்கட்கும் இறையருள் கிடைத்திடவும் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற நடந்தேறிடவும் கந்தப் பெருமானின் நற்றாள் பணிந்து நிற்கின்றேன்.

**செல்லமுத்து ஸ்ரீ நிவாஸன்** *B. A. Dip., ACIM, SLAS*
*பிரதேச செயலர், வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி*

# ''உரேறக் கந்தன் தேரோடட்டும்''

யார்க்கரு விநாயகர் ஆலயத்திற்குத் தெற்கே கப்புதூ என்னும் கிராமத்தில் நெருக்கமாக மக்கள் வாழ்ந்து தமிழ் மன்னர்கள் வட இலங்கைப் பகுதியை ஆண்ட காலத்தில் சைவ சமயிகளாகத் திகழ்ந்து விவசாயத்தில் சிறப்புடையவர்களாக வாழ்ந்தனர்.

இக்கிராமத்தில் தான் தோன்றியாக இருந்த கந்த சுவாமியாரை வணங்கி அவரின் அருளால் மகிழ்வுடன் வாழ, அந்நியரின் ஆட்சியில் இடம் பெயர்ந்து அண்டிய கிராமங்களில் ஒன்றான கரணவாயில் இருக்க நேரிட்டது. இக்கிராமத்தில் இந் நூற்றாண்டில் வாழ்ந்து வரும் திருவாளர் சபாபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை விவசாயத்தில் பிரபலிக்கமும் பெற்று திராட்சை உற்பத்தியில் வெற்றி கண்டு அவுஸ்திரேலிய நாட்டிலிருந்து வந்து குறித்த திராட்சைப் பழத்தை நிறுத்தக் கூடிய வகையில் கந்தசுவாமியார் அருளால் வெற்றி கண்டு அவரின் முன்னோர் வாழ்ந்த கிராமமான கப்புதூவில் தான் தோன்றிக் கந்தசுவாமிக்கு அண்டி வாழ்ந்த மக்கள் அனைவருக்கும் வழிபாட்டிற்காக ஆலயத்தை விஸ்தரித்து நல்லநீர் மக்களின் உபயோகத்திற்கும் ஆலயத்தின் உபயோகத்திற்கும் உதவி செய்து நிற்கின்றார்.

இன்று இக்கோவிலுக்கு இவரின் முயற்சியாலும் உற்சாகத்தாலும் மக்களின் பங்களிப்புடன் ஆறுமுகனுக்கு அறுகோண அழகான சித்திரத்தேரில் அமைந்துள்ளது. அதில் கந்தசுவாமியார் வீதிவலம் செய்யும் வெள்ளோட்டம் இன்று நடைபெறுகின்றது.

நாம் எல்லோரும் இன்புற்று இக்கிராமத்தில் மக்கள் கூடுதலாகக் குடியேறக் கந்தசுவாமியார் அருள் புரிய வேண்டும் என்று வேண்டி நிற்போமாக.

இ. உருத்திரா *B. Sc. (Lond)*
*ADVOCATE* (சட்டத்தரணி)
*சமூக சேவையாளர்*

உ

திரு முருகா

# வாரீர் – வடம் பிடிக்க

முருகன் கலியுக வரதன் கலியுகத்திலே வேண்டுவார் வேண்டுவதை ஈயும் முருகப் பெருமானின் ஆலயங்கள் ஈழத்திலே பல. அதில் யாழ்ப் பெரும்பரப்பில் கரணவாய்க் கப்புதூ என்னும் இடத்தில் அமர்ந்து அடியவர்க்கு அருள் பாலித்து வரும் முருகன் சிறப்புடையது. குளிர்ந்த மரச் சோலை பொலியும் சூழலில் அழகும் தூய்மையும் மிளிரும் இவ்வாலயத்தில் முருகப் பெருமானுக்கு அழகிய சித்திரத் தேர் இன்று வெள்ளோட்டம் ஓடும் காட்சி எமக்கெல்லாம் அருள் பாலிக்கும். ஆலும் அரசும் மாவும் அருகே வேம்பும் புளி பூத்த நிழலுமாய் இயற்கை நிறைந்த முருகனின் அருளும் சைவ ஒழுக்கங்களும் நிலை நின்று அமைவதோடு சாந்தியும் அமைதியும் நிலவ வேண்டும் என்று. எல்லாம்வல்ல முருகனை வேண்டிக் கொண்டு,

இவ்வாலயம் பல அற்புதங்கள் நிறைந்த ஆலயம். ஆனி உத்தரவிழாவில் பல பால்காவடி, பறவைக் காவடி, ஆட்டக் காவடிகளை பக்தி மயமாக்கும் எம்பெருமானுக்குச் சித்திரத்தேர் அசைக்க, அடியார்கள் யாவரும் வாரீர் வடம் பிடிக்கவென வேண்டி,

இத் திருப்பணியினர் இன்னும் பல பணிகளைச் செய்து இவ்வாலயம் சிறப்பருள் பொலிகவென வாழ்த்துவதுடன் இம்மலர் சிறப்புடன் மலர வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

*சி. நாகலிங்கம்*

*செல்வச் சன்னதி ஆ. பேரவைத் தலைவர்*

# தேரின் கட்டமைப்பு

கப்புதூ முருக மூர்த்தி கோவிலில் அலங்கார உற்சவ தினமாகிய (22.05.2002) இன்று புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுகிறது. ஆறுபடை வீடுடைய ஆறு முகனுக்கு, அறு கோணம், 12 வாசலுடன் 12 யாழிகளுடனும் அந்திர மரபு தேர், முக பத்திர அமைப்பில் அமைந்துள்ளார்கள்.

இத் தேரின் சித்திரங்கள் கோயில் வரலாற்றைச் சித்திரிக்கின்றன. ஆரம்பத்தில் கேணியில் தோண்டி எடுக்கப்பட்ட சிலைகளின் சிற்பங்கள் காணப்படுகின்றன. கஜமுகாசுர, சிங்கமுகாசுர, சூரபத்மா சம்காரங்கள் காணப்படுகின்றன.

இரண்டாவது சிற்ப வரிசையில் ஆறுபடை வீட்டுக் காட்சிகள் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. 12 மயில்கள் தோகை விரித்தபடி அமைந்துள்ளன. கீழ் விக்கிரக வரிசையில் மகரக்கட்டை, கஜசிம்மம், அ்ன்னக்கட்டைகள் அமைந்துள்ளன.

மேல் விதானத்தில் பந்தல் பகுதியில் முருகனின் 'சரவணபவ' என்னும் ஆறு கோறை யந்திரம் பதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது. இத்தேர் கப்புதூ முருகன் கோவில் மூலஸ்தானத்தின் கால் பிரவாய் அளவின் 3 மடங்குக்கு அமைக்கப்பட்டுள்ளது.

இப்படியான பல சிறப்புகள் வாய்ந்த இச் சித்திரத் தேரைப் புத்தூர்ச் சோமாஸ்கந்தக் கல்லூரியின் மாணவனும், சிற்பக் கலாநிதி செ. கந்தசாமியின் பிரதம சிஷ்யனுமாகிய ஸ்தபதி விஸ்வப் பிரம்மஸ்ரீ செ. பாலச்சந்திரன் ஆச்சாரியார் குழுவினர், அவரின் தம்பியார் ஸ்தபதி ம. விஜயரத்தினத்தின் உதவியுடன் அமைத்துள்ளார்கள்.

இவர்களின் கைவண்ணம் போற்றுதற்குரியதாகும். இப்படிச் சிறப்புற அமைந்தமையைப் பாராட்டித் திருப்பணியினர் செ. பாலசந்திரனுக்கு 'சிற்பகலாரத்தினம்' என்னும் பட்டத்தைச் சூட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்கள். சைவ சமயக் கோயில்கள் பலவிதத்தில் எம்மக்களுடைய சேவைகளுக்கு மேடை அமைத்துக் கொடுக்கின்றன. இதனால் பல கலைஞர்கள் பல்வேறு துறையில் உருவாக்கும் பெருமை எமது சமயத்தையே சாரும். இப்படியான பல சிறப்புகள் வாய்ந்த இச் சித்திரத்தேர் வெள்ளோட்டம் காணும் பெரும் பேறு பெற்றுள்ளோம். எல்லா உயிர்களும் குறைவிலாது வாழ்ந்து போகங்களை அனுபவித்து முருகனின் பாதார விந்தங்களை அடைய வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

*"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*

பிரம்மஸ்ரீ சி. திசாகரசர்மா
திருநெல்வேலி

உ

சிவமயம்

அருள்மிகு நுணுப்பாவளைக் கந்தசுவாமியார்
சித்திரத் தேரில் வீற்றிருந்து திருவீதி உலா வந்த ஞான்று சந்நிதியான்
ஆச்சிரம - சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை

# வாழ்த்திய வாழ்த்துப்பா

**பல்லவி**

அருள்மிகு நுணுப்பா வளைஅமர் கந்தவேளே
ஆரோ கணமாகிச் சித்திரத்தேர் எழுந்தருள்வோய்
(அருள்மிகு)

**அநுபல்லவி**

கலியுக வரதனெனக் கண்கண்ட தெய்வமெனக்
கப்புதூ நுணுப்பா வளைதனில் வீற்றருள்வோய்
(அருள்மிகு)

**சரணம்**

அருண கிரிதன்னை ஆண்டுகொண் டருள்நூலாம்
அலங்காரம் பாடவைத்த அருள்ஞான பண்டிதனே
குருவெனவாய்த் தந்தைக்கு உபதேசம் கொடுத்தவரே
குலவுவள்ளி தெய்வானை சமேதரராம் கோமளமே
(அருள்மிகு)

இறையனார் களவியற்கு நச்சினார்க் கினியருரை
ஏற்ற முடைத்தென்னக் காட்டினை பண்டிதனே
மறைவல்ல பிரம்மாபால் ஓமதன் பொருள்கேட்டு
மயங்கவே வைத்த கொற்றவடி வேலவனே
(அருள்மிகு)

உமையம்மை பாலன்று வேற்படையால் அசுரகுலம்
ஒழித்தே அமரர் உலகாள வைத்தவரே
எமையாள் கந்தவேளே, இச்செகம் எங்கணுமே
இன்சாந்தி, சாமாதானம் என்றுமே நிலைக்க அருள்
(அருள்மிகு)

உ

# அருட்பெருஞ் சோதி தனிப் பெருங்கருணை ஐயன் முருகன் மகிழ்ந்திடு நாள்!

கலியுக வரதனாங் காட்டுக் கந்தசுவாமி கருணையால் கவின் எழிற் கனகரதம்! எம் தாய் மண்ணில் தமிழாட்சி மலரும் இத்தருணத்தில், முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைக்கும் அந்தத் தமிழ்த் தெய்வத்துக்குத் தமிழ்த் தடந்தேர்! ஏறுமயில் வாகனற்கு ஆறுபடை வீடுடைய மோகனற்கு வீறு மகிழ்ச்சித் திருநாள் இத்தேர் வெள்ளோட்டப் பெருநாள். எம் வினைகளனைத்தும் தினையளவுமின்றி முனைப்பழிந்து போகத் தேரேறி வருகிறான் சீரெழில் முருகன். அவன் வீதி வருங்காட்சி ஓதரிய காட்சி. கண்ணுக்கினியது; கருத்துக்குரியது; உட் கசிவுக்குரியது.

இத்தகு சித்திரத்தேரைச் சித்த சுத்தியோடு பத்தியாய்ச் சிறப்புற நிறைவேற்றிய அன்பிற்குரிய செ. பாலச்சந்திர ஆசாரியார் நிர்வாகத்துள்ள ஸ்ரீ காளிகா சிற்பாலயத்தினர்க்கும், அவர் தம் தம்பியார் இரத்தினம் அவர்கட்கும், ஏனையோர்க்கும் முருகன் திருவருள் அமுதம் நண்ணுக என வாழ்த்தி வணங்குகிறேன்.

மேலும் சித்திரத் தேருக்கான தேர்முட்டியை அமைக்குந் திருப்பணியை முன்னின்று தலைமை தாங்கிப் பத்தி சிரத்தையோடு நிறைவேற்றிய மைந்தன் பொறியியலாளர் இரவிக்குமார் அவர்கட்கும், அவரொடு கூடி ஒத்தாசை புரிந்தோர் அனைவர்க்கும், வீதியமைப்புப் பணி புரிந்தோர்க்கும், துடிப்பு, உற்சாகமிக்க இளைஞர்க்கும், இன்னும் உடல் உள நிதி ரீதியாக உதவியோர் அனைவர்க்கும், இம்மலர் சிறப்புற சிங்காரத் தமிழ் தந்து கலந்து கொண்ட அன்பிற்குரிய உடுப்பிட்டி கா. நீலகண்டன் ஆசிரியர் அவர்கட்கும் அழகுற இச்சித்திரத் தேர் மலரை அச்சுருவம் தந்தமைத்த யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்திற்கும் கப்புதூ முருகன் ஒப்பிலருள் கிடைக்கவென வாழ்த்துகிறேன்.

*அணுப்பா லளவு மணுகா விடர்வள*
*நுணுப்பா வளைவேள் நோன்றாள் துணையே.*

ச. தாமோதரம்பிள்ளை
*தேர்த் திருப்பணித் தலைவர்*
*காட்டுக் கந்தன் தேவஸ்தானப் பொருளாளர்*

உ
முருகா

# கப்புதூ காட்டுக் கந்தன் வரலாறும் அருட்காட்சியும்

### "கப்புதூக் காட்டுக் கவின்தலச் சரிதம் செப்புதற் கியைதுணை சிந்துரா னனனே!

யாழ்க் குடா நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளவை வடமறவராட்சியும் தென்மறவராட்சியும் தென்மறவராட்சி தென்மராட்சியமாய் மருவியது. இப்பகுதியில் 'மறவனபுலம்' என்னும் இடம் உள்ளதும் நோக்கத்தக்கது இது இன்று "மறவன்புலோ" வாகி விட்டது. வடமறவராட்சி "வடமராட்சியாய்" மருவி விட்டது. இவ்விரு ஆட்சிப்பிரிவுகளிலும் பெரும்பாலாகக் குடியேறியவர்கள் மறவர்கள். தென்னிந்தியத் தென் பகுதிக் கரையோரமக்கள் மறவர்கள் அவர்களே பெரும்பான்மையினராய் இப்பகுதிகளில் வந்து குடியேறியதாகக் கருதப்படுகிறது. இந்த மறவர்கள் போர்த் தொழிலாளர். அரசர்களின் படைச் சேனா வீரர்கள். இந்த மறவர்கள் "தேவர்" எனவும் அழைக்கப்பட்டனர். நாங்கள் இலக்கியங்களிற் சந்திக்கின்ற விண்ணுலகத் தேவர்கள் அல்லர் இந்தத் தேவர்கள். "பெரிய தேவனத்தாய்", "சின்னத்தேவனத்தாய்" என்னும் பெயர்கள் இத்தேவர்களை ஞாபகம் ஊட்டுவன. இமையாணத் தேவன் குறிச்சி, சமரபாகு தேவன் குறிச்சி என்பனவுந் தேவர்களை நினைவுறுத்துவன. இமையாண தேவனும், சமரபாகு தேவனும் யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்திருந்த சேனைத் தலைவர்கள். இந்த வடமராட்சிப் பிரிவு இரு தேர்தற் றொகுதிகளைக் கொண்டுள்ளது. இதில் ஒன்று உடுப்பிட்டித் தேர்தற் றொகுதி. இத் தொகுதியில் உள்ளது கருணைவாய் தெற்கு. கருணீகர் வாழ்ந்த இடம் கருணைவாய் ஆயிற்று. கருணீகர் கணக்கர். இந்தக்கணக்கர்கள் தொண்டைமானோடும், அவன் பெயரால் வழங்கப்பட்டு வரும் ஆறு வெட்டி ஆழமாக்கப்பட்ட காலத்தோடும் சம்பந்தவப்பட்டவர்கள்.

இந்தக் கரணவாய் தெற்கைத் தென் கருணையூர் எனவும் அழைப்பர். இந்தத்தென் கருணையூரிற் சிறப்பிடம் பெறுவது குருக்கள் குடியிருப்பு. இங்கிருப்பவர்கள் சைவக் குருக்கள்மார். இவர்கள் வேதாரணியத் தொடர்புடையவர்கள். வரணி ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள். வரணி ஆதீனத்தவர் தாயுமானசுவாமிகள். அன்றியும் வேதாரணிய ஆதீனமும் இவர்களது. இது மறைசை ஆதினம் எனவும் படும். இவ் ஆதீனப் பாலனத்திற்கானவையே வேதாரணியமும் எட்டிகுடியும். இக்குருக்கள் குடியிருப்பில் உள்ளது வேதாரணியேஸ்வரர் வித்யாசாலை. இக்குருமார் பரம்பரைச் சிறப்பு பற்றி நாவலர் பிரபந்தத் திரட்டிற் பரக்கக்காணலாம். இவர்கள் பரம்பரை பரம்பரையாக வடமொழி தென்மொழிப் புலமை வாய்ந்தவர்கள். வேதாகமத் தேர்ச்சி மிக்கவர்கள். சைவக் கிரியா முறைகளில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்கள். சுத்த சைவ சித்தாந்திகள். இக்குருக்கள்மாரே கப்புதூ முருகன் அர்ச்சகர்கள்.

தூ என்பது வெளியெனும் பொருளுடையது. இந்த தூ வெளிக்குங் கரவைவேலன் கோவைபாடிய சின்னத்தம்பிப் புலவருக்குந் தொடர்புண்டு. இப்பகுதி மக்கள் சின்னத்தம்பிப்புலவரை அலங்காரப் பந்தரிட்டு வரவேற்றுக்கௌரவித்தார்களாம். அப்பந்தற்குரிய "கப்பு" - தூண் - ஒன்று நெடுநாட்களாக அகற்றப்படாதிருந்ததாம். அதனாற் "கப்புதூ" எனப் பெயர் வந்தது. சதாசிவையர் பதிப்பித்த கரவை வேலன் கோவையைக் காண்க.

இக்கப்புதூக்காட்டுக்கந்தன் குடிகொண்ட காலம் எவருக்குந் தெரியாது. எமது முன்னோர் சொல்லிவைக்கவும் இல்லை, எழுதி வைக்கவும் இல்லை. ஒல்லாந்தர் வருகைக்கு முன் அதாவது 1638ம் ஆண்டுக்கு முன்பே கற்கோயில் இருந்தது என்பதை நாம் அறியக் கூடிய சான்றுகள் உள்ளன. ஏனெனில் மன்னார் மாதோட்டம் திருக்கேதீச்சரமும் ஒல்லாந்தர் வருகையின் பின் தான் இடித்து அழிக்கப்பட்டன. அது போலவே கப்புதூக் காட்டுக் கந்தன் கோயிலும் அழிக்கப்பட்டது. அது அழிப்பதற்கு முன்பதாகவே அப்போது இருந்த எமது மூதாதையர் கோயில் விக்கிரகம் பிள்ளையார் மூலவிக்கிரகமாகிய முருகன், வள்ளி, தெய்வநாயகி, பலிபீடம், மயில், வேல் இவையும் சுற்றுக்கோயில் நாகதம்பிரான், வைரவர். வெளியே தெற்கு வீதியில் உள்ள கண்ணகி அம்மன் சிலம்பு இவை எல்லாவற்றையும் அப்போது இருந்த திருக்குளத்தில் மறைத்து விட்டார்கள். பின்பு கோயில் இருந்த இடம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு ஒரு கல் திடலாகவே இருந்தது. சைவ சமய வழிபாடு என்ற கதையே இல்லாமல் எல்லா ஊர்மக்களும் மௌனமாகவே இருந்து விட்டார்கள். ஒல்லாந்தர் ஆட்சிக்குப் பின் 1796ஆம் ஆண்டு ஆட்சி அதாவது 158 வருடத்திற்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமானது. அவர்கள் அவரவர் சமயத்தை ஆதரிக்கும் அனுமதி கொடுத்தார்கள். 158 வருடத்திற்குப் பின் திருக்குளம் பற்றை மூடிய பள்ளமாகவே இருந்தது. முன்பு கோயில் இருந்த இடத்துக்கு முன்பாக ஒரு கிணறும் இருந்தது. அப்போது இருந்த எமது மூதாதையர் கோயில் இருந்த இடத்தை ஆராய்ந்து அந்த இடத்தில் ஒரு சின்னக் கொட்டில் போட்டு வேல் ஒன்றை வைத்து வணங்கி வர முருகன் தனது அருளாட்சியைக் காட்டத் தொடங்கிவிட்டார். அப்போது இருந்தவர்கள் முருகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்து வழிபாடு ஆற்றி வந்திருக்கிறார்கள். பின்பு ஆங்கிலேயர் ஆட்சி நிலை கொண்டதும் ஊர் மக்கள் எல்லோருக்கும் அவரவர் ஆதிக்கத்தில் உள்ள காணிகளைப் பதிவு செய்யும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அது தான் 'தோம்பு' பிறந்த காலம். 1860இல் அப்போது இருந்த எமது மூதாதையர் கோணர், முருகன், நீலன், அருணன், புதியன், வாரி, குழந்தை என்போர்கள் தங்கள் காலத்தில் ஆட்சியில் உள்ள காணிகளை எல்லாம் பதிவுசெய்து விட்டு கப்பூதூ முருகன் குடிகொண்ட காட்டுச் சூழலை நுணுப்பாவளை எனும் பெயரில் பதிவு செய்தனர் அது பொதுவாக 70 ஏக்கர் கொண்டதாய் வீடுகள், தோட்டம், காடு, வயல் தரிசுநிலம், கற்பாடு என இவை எல்லாம் அதற்குள் அடங்கியதாயுமிருந்தது. இதன் வருமானம் எல்லாம் முருகன் பூசை, ஆராதனைக்கு விடப்பட்டன. ஆனால் அதற்கு எந்த விதமான எழுத்து மூல உறுதியுமிருக்கவில்லை வாய்ச் சொல்லின் படி அந்தக் காலத்தில் நடைபெற்று வந்தது. பின்பு முருகனின் அருட்காட்சிகள் பெருகத் தொடங்கியதும் முன்பு இருந்த சின்னக் கொட்டிலை அகற்றி அந்த இடத்தினை மூலஸ்தானமாகவும் முன்பக்கம் நின்று வழிபட வசதியாகப் பெரிய கொட்டிலும் அமைத்து 1840 ஆம் ஆண்டு அந்த ஊரில் உள்ள சைவக் குடும்பத்தில் உள்ள கந்தையா ஐயர் என்பவரை நியமித்து முன்பிருந்த அதே வேலை வைத்துப் பூசைகள் செய்து வந்தனர். முருகன் அடியார்கள் தாங்கள் தங்கள் நேர்த்திகளையும் செய்து முருகனின் விசேஷ தினங்களையும் சிறப்பாக நடத்தி வந்தார்கள்.

நான் முன்பு சொன்ன பழைய கிணற்றையே துப்பரவு செய்து அதில் இருந்தே சகல பாவனைக்கும் தண்ணீர் எடுத்து வந்தார்கள். பின்பு கந்தையா ஐயர் முதுமை அடைந்ததும் தனது மகன் அருணாசலம் என்பவரைப் பூசை செய்யும்படி 1880 ஆம் ஆண்டில் நியமித்தார். அவர் பெரிய முருக பக்தன். மிகவும் பயபக்தியுடனும் பண்பாகவும் அன்பாகவும் பூசை நடத்தி வந்தார். அவர் காலத்தில் எத்தனையோ நோயாளிகள் முருகனிடம் வந்து வணங்கி அருணாசலம் ஐயா விபூதி எறிந்தவுடன் குணமடைந்து போனவர்கள். இப்படி இருக்கும் காலத்தில் முன்பு சொன்ன முருகர் என்பவரின் மகன் சண்முகம் அவரின் மகன் வேலுப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளையை மணஞ்செய்து அவருக்குப் பிள்ளைகள் சின்னவர் அல்லது தக்கர், சுப்பர், நாகமுத்து, கந்தையா, சபாபதிப்பிள்ளை, குமாரசாமி என ஆறு ஆண்மக்களும் சின்னப்பிள்ளை என்ற பெண் பிள்ளையையும் பெற்று வளர்த்து வரும் காலத்தில் வேலுப்பிள்ளை என்பவர் மற்றவர்களின் உதவியோடு ஒரு குளம் தோண்டினார். தோண்டிய இடம் ஏலவே மூடப்பட்டிருந்த பழைய குளம். அந்த இடத்தைத் தெரிவு செய்து துப்பரவு செய்தார்கள். எல்லாம் துப்பரவு செய்த அடுத்தநாள் குளம் வெட்ட ஆரம்பம். அருணாசலம் ஐயாவை அருணி ஐயர் என்றும்




1800 களில் வேல்கொட்டில் இருந்த காலத்துத் தோற்றம்.

சொல்வார்கள் அவருக்கு அன்று இரவு முருகன் சொப்பனத்தில் குளம் அமைக்கும் இடத்தில் சுவாமி விக்கிரகங்கள் இருப்பதாகச் சொல்லி மறைந்தார்கள். அடுத்தநாள் காலை வழமை போல் கோயிலுக்குப் பூசைக்குப் போனவர் முதலில் குளம் வெட்டுபவர்களைச் சந்தித்து நான் இரவு ஒரு சொப்பனம் கண்டேன். "குளம் வெட்டப்படும் இடத்தில் சுவாமி விக்கிரகங்கள் இருப்பதாக முருகன் சொல்லி இருக்கிறார், ஆகவே எல்லோரும் மிகவும் கவனமாகப் பார்த்து வெட்டுங்கோ" என்று சொன்னார். பின் முருகனின் பூசைக் காரியம் எல்லாம் முடித்து விட்டு அங்கேயே நின்று விட்டார். குளம் வெட்டியவர்கள் 'கணீர்' என்ற சத்தம் கேட்டவுடன் திகைத்து விட்டார்கள். பின்பு மெதுவாக ஆராய்ந்து பார்த்தார்கள். மேலே குறிப்பிடப்பட்ட விக்கிரகங்கள் இருப்பதைக் கண்டு ஆனந்தங் கொண்டனர். அங்கு இருந்தவற்றில் மயில் சொண்டு மட்டும் உடைந்து விட்டது. அங்கிருந்தோர் விரைந்து சென்று அருணி ஐயாவிடம் சொன்னார்கள். உடனே அவர் வந்து பார்த்ததும் பக்திப் பெருக்கால் உருக்கொண்டு எல்லா விக்கிரகங்களையும் எடுத்து வெளியில் வைத்து நன்னீரால் அபிஷேகம் செய்து கற்பூர தீபாராதனை காட்டி வேல் வைத்து பூசை நடத்தும் கொட்டிலுக்குள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி வைத்துக் கொண்டிருக்கும் போது ஊர்மக்களும் வந்து கூடி விட்டார்கள். பின்பு எல்லோரும் பார்க்க விசேட பூசையும் நடந்தது. மக்கள் எல்லாம் பரவசமடைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து முருகன் பெருமைகளைச் சொல்லி வணங்கியபின் எல்லோரும் முருகனுக்கு கோயில் கட்ட வேண்டும் என்று தீர்மானித்து விட்டுத் தொடர்ந்து அப்படியே பூசையையும் நடத்திக் கொண்டு குளமும் வெட்டினார்கள்.

அந்தக் காலத்தில் கோயில் சூழல் காணி ஒரு பகுதி அரசாங்கக் காணி என்ற சச்சரவின் பின் எங்கள் உரிமைக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். இறுதியில் அப்போது வழக்கு நடத்திய நீதிபதி குதிரை வண்டியில் கப்பூதாவுக்கு வந்து காணி எல்லாம் சுற்றிப் பார்த்து விட்டுப் போய் 1910 ஆம் ஆண்டு கப்பூதா நுணுப்பாவளை என்னும் தோம்பிற்குரிய நாட்டவர் காணி என்று தீர்ப்பளித்து விட்டார்.

பின்பு 1910 ஆண்டுக்குப் பின் தான் கோயில் கட்ட வேண்டும் என்று ஆரம்பித்துக் கரணைவாயில் அப்போது வேத ஆகம கிரியா முறைகளை எல்லாம் கற்றுத் தெளிந்த சிவாச்சாரியார் ஸ்ரீலஸ்ரீ செல்லையாக் குருக்கள் என்பவரிடம் வேலுப்பிள்ளையும் மற்றும் எல்லோரும் சென்று முருகன் விக்கிரகங்கள் இப்படி இருக்க நாங்கள் எங்களது இயல்புக்குத் தக்கதாய் ஒரு கோயில் அமைக்க வேண்டும். ஆகவே நீங்களும் வேறு சிற்பாசாரியாரும் வந்து கோயில் அமைக்கும் இடத்தைப் பார்த்துச் செல்ல வேண்டும் என்றதற்கு இணங்க அவர்கள் கப்பூதா வந்து சூழலை எல்லாம் பார்த்து ஆல், புளி, வேம்பு மரங்கள் எல்லாம் இருக்கத்தக்கதாகவும் வீதி எல்லாம் அமையக்கூடியதாகவும் தற்போது உள்ள இடத்தைத் தெரிவு செய்ய நல்ல நாள் முகூர்த்தம் பார்த்துத் தரவேண்டும்மென்றோம். 1914ஆம் ஆண்டு அத்திபாரம் இடப்பட்டு வெள்ளைக் கற்களால் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டது. ஆனால் வேல் இருந்த கொட்டில் அப்படியே இருக்க அதற்கு வடக்குப் புறமாகவே கோயில் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அது எப்போதும் அழிக்கப்படாமல் அதில் உள்ள பிரமாணத்தின்படி மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன திருப்பணி வேலைகளாகச் செய்யப்பட்டு யாகமண்டபம், தரிசன மண்டபம் கொட்டிலாகப் போடப்பட்டு வேலை நடக்கிற காலத்தில்,

கரணவாய் தெற்கில் வல்லி என்பவர் தனது தொழில் காரணமாக ஈச்சோலை வெட்டிக் கொண்டிருந்தார். அச் சமயம் இக்கோயிலின் தெற்குப் புறமாகவுள்ள குளம் அமைந்த பகுதிக்கு மேற்காகவிருந்த பகுதி ஈச்சம்பற்றை செழிப்பாக இருந்தது. ஆனபடியால் அந்தப் பகுதியில் ஈச்சோலை வெட்டும் போது பொன் இருப்பது கண்டு கை வைத்தார். உடனே அவரது கை வழங்கவில்லை. பொன்னும் பூமிக்குள் மறைந்து விட்டது. அவருக்கு மயக்கம்



1900 களில் எளிமையான தேர் மாதிரியுடன் மீண்டும் கற்கோயிலில் காட்டுக் கந்தனின் தோற்றம்.


வந்துவிட்டது. நினைவாற்றலில்லை. அங்கு நின்றவர்கள் பூசகர் அருணி ஐயாவுக்குத் தெரிவிக்கவே. அவர் சென்று விபூதி போட்டதுமே மயக்கம் தெளிந்தது. கை வழங்கவில்லை. பின் அவர் கரணவாய் வந்துவிட்டார். அவர் ஈச்சோலை வெட்டிய இடத்தில் தான் பாதாளபைரவர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாகப் பல காட்சிகள் தொடர முருகன் கோயில் கட்டுமானப் பணி எல்லாம் வேலுப்பிள்ளை சின்னர் அல்லது தக்கர் என்பவர் தலைமை தாங்கித் தனது தம்பிமார் உறவினருதவியோடு நடந்தது. இப்படியாகப் பணியாற்றி வந்தவேளை மேற்கொண்டு வேலை செய்யப் பணவசதி இல்லாத படியால் 1926ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தில் திருக்குளத்தில் எடுத்திருந்த விக்கிரகங்கள் எல்லாவற்றையும் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. இவை எல்லாவற்றையும் முன்பு சொன்ன ஸ்ரீலஸ்ரீ செல்லையாக் குருக்கள் சிறப்புற நிறைவாக்க. அருணி ஐயாவே தொடர்ந்தும் பூசை நடாத்தி வந்தார். வேற்கொட்டில் அப்படியே இருக்க பெரியப்பா தக்கர் என்பவர் தன் விருப்பப்படியே வேலுக்குத் திருக்குளத்து நீர் கொண்டு அபிஷேகம் செய்து ஆராதனை செய்தார். அதன்பின் முருகன் சந்நிதானம் சென்று வணங்குவார். வேற்கொட்டிலில் தான் விசேட காலங்களில் அன்னதானம் வழங்கப்படுவதும் வழக்கமாகி விட்டது. இப்படி நடக்கும் காலத்தில் திருவிழாச் செய்வதென்றால் கோயில் மண்டபம், மூலஸ்தானம், பண்டிகை, சுற்றுமதில் எல்லாம் கட்டித் தான் செய்ய வேண்டும் என்று ஊர்மக்களும் எல்லோரும் சேர்ந்து 1932ஆம் ஆண்டு செய்தனர். பாலஸ்தாபனம், மூலஸ்தானப் பண்டிகை வேலை, தரிசன மண்டபம், பிள்ளையாருக்குக் கோயில், சுற்றுமதில் எல்லாம் வேலை நடக்கிறது. திருஞானசம்பந்தருக்கு மூன்று வயதில் அம்மை அப்பர் ஞானப்பால் ஊட்டியதுபோல் அடியேனும் மூன்று வயதில் தந்தையாருடன் நின்று சுற்று மதில் சாந்து குழைத்து கண்ட கற்களால் கட்டியதைப் பார்த்தது இன்றும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றது. இதற்குப் பின் நடந்த முருகனின் நிகழ்வுகள் எல்லாம் அடியேன் நெஞ்சில் பதிவாகி இருக்கின்றது.

மேலே எழுதப்பட்ட வரலாறு எமது தந்தையார் சபாபதிப்பிள்ளை என்பவர் எனக்குச் சொல்லியவை. ஆதிமூல வரலாறு அடியேனுக்கு முருகனால் தூண்டப்பட்டவை ஒல்லாந்தர் வருகை 1638ல். அதற்கு முன் கற்கோயில் இருந்தது என்றால் அதை எல்லோருமே கணக்கிட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். இப்படிப்பட்ட காலம் கணிப்பிட முடியாது பெருமை வாய்ந்த முருகனின் குடியிருப்பை எமது மூதாதையர் மௌனமாக வைத்து விட்டார்கள். அதுதான் பெரும் கவலை. இனி எழுதப்போவது எல்லாம் எனது கண்ணால் பார்த்துப் பதிய வைத்தவை. இப்படியே சுற்றுமதில் எல்லாம் கட்டி வெளி வாசல் பகுதியும் ஒரு பெரிய கொட்டில் போட்டு 1934ஆம் ஆண்டு மேற்சொன்ன ஸ்ரீலஸ்ரீ செல்லையாக் குருக்கள் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தி வைத்தார். சுவாமிகளுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தியது இப்போதும் மனதில் பசுமையாக இருக்கின்றது. பின்பு திருவிழாச் செய்ய வேண்டும் என்று எல்லோரும் தீர்மானித்து 10 நாள் திருவிழாவிற்கு ஆட்களை நியமித்தோம். தமிழுக்கு வைகாசி மாத அமாவாசையை அடுத்து வரும் சஷ்டி திதியில் திருவிழாத் தொடங்கி விசாக நட்சத்திரம் கூடிய பௌர்ணமியில் தீர்த்த உற்சவம் நடைபெற்று வந்தது. அன்று தொட்டு 10 நாளும் அன்னதானம் வழங்கப்பட்டது. அத்தோடு நில்லாமல் ஆனி உத்தரவிழாவில் காவடி, கரகம், பால்செம்பு என அடியார் பெரும் கூட்டமாக கொண்டாடி மகிழ்ந்தனர். ஐப்பசி வெள்ளி மற்றும் விசேட காலங்கள் எல்லாம் அன்னதானம் வெகுசிறப்பாக நடந்தது. திருவிழாக் காலங்களில் சுவாமி வெளிவீதி வருவது செல்வச் சந்நிதி போல் வேலைப் பீடத்தில் வைத்து மாலைகளால் அலங்கரித்துச் சுவாமி வெளிவீதி வரச் செய்தோம். முதலாவது திருவிழாவை நடத்திவிட்டுச் செல்லையாக் குருக்கள் தனது தம்பியார் ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாதக் குருக்களை வருங்காலத் திருவிழா விஷேட கால அபிஷேகம் எல்லாவற்றையும் நடத்தும் படி பணித்துவிட்டார். பின்பு அவர்தான் எல்லாவற்றையும் சிறப்பாக நடத்திக் கொண்டு வந்தார். அவர் ஆட்கள் இல்லாத படியால் 3ம் திருவிழாவையும் தனது பொறுப்பில் எடுத்து மிகவும் பக்தியோடு நடாத்தி வந்தார். அருணி ஐயா வரும் நோயாளருக்கு நீறெறிந்து, நோய் நீக்கஞ் செய்தார்.

இவர் இப்படியாக நடக்கும் காலத்தில் 1936ஆம் ஆண்டில் சிவபதம் அடைந்துவிட்டார். அதன் பின் அருணி ஐயாவின் பரம்பரையில் உள்ள கணபதிப்பிள்ளை ஐயா சிலகாலம் பூஜை நடத்திக் கொண்டு இருக்க வேலுப்பிள்ளை மகன் குமாரசாமி என்பவருடைய மகன் ஏகாம்பர மூர்த்தியை ஸ்ரீலஸ்ரீ செல்லையாக் குருக்கள் விசேட பூசை செய்து அவரையே பூசகராக்கி விட்டார். அவர் பூசை நடாத்தி வரும் காலத்தில் 1939 இலிருந்து கோயில் உரிமைக்காரருக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு நீதிமன்றம்வரை சென்றது. அதன்பின் அப்போது உள்ள சட்டத்தரணிகள் நாட்களைக் கடத்தித் தவணைகள் போட்டு இழுத்தடித்தார்கள் வழக்கை. இறுதியில் 1945ம் ஆண்டளவில் ஒரு நிர்வாகத்தை அமைத்துக் கோயிலை நடதும்படி தீர்ப்பளிக்கப்பட்டது. அதன்பின் எனது தமையனார் பொன்னுத்துரை என்பவரைத் தலைவராகத் தெரிவு செய்து அதன் கீழ் மற்றும் உள்ளோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கோயிற் செயல்பாடுகள் எல்லாம் திறமையாக நடந்து கொண்டு வந்தது. அப்போது கோயில் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்று திருவிழா நிறுத்தமுடன் செயற்பாடுகள் ஆரம்பமாகின. ஏரம்ப மூர்த்தி என்பவரால் முருகன் வள்ளி தெய்வநாயகி அம்மன் சிவ விக்கிரகங்களும் வந்து சேர்ந்தன. 1959ஆம் ஆண்டு ஏரம்ப மூர்த்தி என்பவரும் சிவபதம் அடைந்து விட்டார். பின்பு கரம்பனைச் சேர்ந்த சைவப் பரம்பரையில் வந்த பிச்சைஐயர் என்பவரைப் பூசகராக நியமித்தனர். அவரும் மிகவும் பயபக்தியுடன் பூசைக் காரியங்களைச் சிறப்பாக நடத்தி வந்தார். அப்போது மூலஸ்தானப் பண்டிகையையும் புதுப்பித்து, கிடுகால் வேயப்பட்டிருந்த மகாமண்டபமும் மரம்போட்டு ஓடுகளால் வேயப்பட்டது. வெளிச் சபா மண்டபமும் கட்டி ஓடுபோடப்பட்டது. 1962ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ குகதாசக் குருக்கள் மகாகும்பாபிஷேகத்தை நடாத்தினார். திருவுலாவும் சிவ விக்கிரகம் முருகன் வள்ளி தெய்வநாயகி ஆகிய முத்துக்குமாரசாமி வடிவராக வீதி உலா நடாத்தப்பட்ட பின்பும் தொடர்ந்து பிச்சை ஐயாவே பூசை நடாத்தினார். அவர் செயற்பாடுகள் அருணி ஐயாவின் செயல் போல் அமைந்தன.

தொடர்ந்தும் ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் தான் திருவிழா விஷேகால அபிஷேக்ம் எல்லாம் நடத்தி வந்தார். இவருடைய காலத்துக்குள் முருகனின் அற்புதங்கள் அருட்காட்சிகள் மற்றவர்களும் அறிய வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன். ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாதக் குருக்களுக்கு "ஐயா இந்த முருகன் கோயில் கருணைவாய் எங்கள் குடியிருப்போடு அண்டியிருந்தால் நாம் எல்லாம் நல்ல மாதிரிச் செயல்படுவோம்" என்று சொன்னேன். அதற்கு அவர் சொன்னார் . "முருகன் காடு, மலை, கடலோரம் தான் அவருடைய குடியிருப்பு ஆகவே அவர் இருக்கும் இடத்திற்கு நாங்கள் போவது அல்லாமல் நாம் இருக்கும் இடத்திற்கு அவர் வரமாட்டார் என்று பல உதாரணங்களையும் எடுத்துக் காட்டி விளக்கினார். அதன்பின்தான் அதன் உண்மையைத் தெரிந்து கொண்டேன். இது இப்படி இருக்க எங்கள் பெரியப்பா தக்கர் என்பவர் 1945ஆம் ஆண்டு சிவபதம் அடைந்தார். தொடர்ந்து 1970ஆம் ஆண்டு நிகழ்வுகளில் ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் சிவபதம் அடைந்து விட்டார். அதன்பின் ஸ்ரீலஸ்ரீ செல்லையா குருக்களின் மகன் ஸ்ரீலஸ்ரீ தியாகராஜக் குருக்கள் திருவிழா, மற்றும் அபிஷேக ஆராதனைகளைச் சிறப்புற நடாத்தி வந்தார். நித்தியப் பூசையைப் பிச்சைஐயர் நடாத்திக் கொண்டு வந்தார். அவர் காலத்திலும் அருணி ஐயா காலத்திலும் நிகழ்ந்த மாதிரி, நோயாளிகள் வந்து முருகனை வணங்கி விட்டு பிச்சை ஐயா விபூதி போடக் குணமடைந்து செல்வார்கள். அப்போது எமது தந்தையார்தான் திருவிழாவைத் தலைமை தாங்கி நடாத்தி வந்தார். அப்போது தேர் கட்டுவதற்கு அயலிலுள்ள ஒருவரின் கட்டுக்கால் போட்ட மாட்டுத் தொட்டிலை வேறொருவரின் துணையுடன் சுமந்து வந்து தடிகள் வைத்துக் கட்டி கமுகம் சட்டத்தால் கட்டி கூடு கட்டி வெள்ளை வர்ணச் சேலைகள் கட்டித் தேர் மாதிரி உருவாக்கினோம். இரண்டு வண்டில்களில் உள்ள பார்ப்பலகைகளை இறக்கி வைத்து விட்டு வண்டில் துலா இரண்டையும் சேர்த்துப் பிணைத்து அதில் கட்டிய தேரை வைத்து நாலு சில்லுத் தேர் மாதிரியாக்கினோம். அவ் வேலைப்பீடத்தில் வைத்து அலங்கரித்து தேரில் வருவது போல வீதி வலம் வரச் செய்தோம். இப்போதும் பசுமையாக இது இருக்கின்றது. இதெல்லாவற்றையும் எனது மனதில் பதிய வைத்தார் முருகன். முருகா இது எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்வதற்கு எங்களுக்கு

உரிய வல்லமையைத் தரும் படிவேண்டி நின்றேன். மனதளவில் சொல்லி வைத்தேன். 1976ம் ஆண்டு முருகனின் வாசலில் எல்லோரும் கூடி பாலஸ்தாபனம் செய்து கோயில் திருப்பணி மற்றும் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய முடிவானது. அதோடு அன்னதான மண்டபம் அமைக்கப்படாமல் இருந்தது. வேலையும் அப்படியே இருந்தது. இவ்வேளை எமது சின்னத் தமையனார் சிவகுருநாதன் என்பவர் மலேசியாவில் இருந்து வந்தார். கோயில் உள்ளே நின்று கொண்டு என்னைக் கூப்பிட்டார். நான் போனேன். 'ஏனப்பா இப்படியெல்லாம் பெரிய எடுப்பாகச் செய்தீர்கள். ஒரு அளவாகச் செய்திருக்கலாமே' என்றார். நான் "இதெல்லாம் இப்படி அமைய வேண்டுமென்று முருகன் நெஞ்சில் பதித்து விட்டார், இப்ப இனி என்ன நிலம் போடுகிற வேலைதானே, அது ஒரு சுலபமான வேலை" என்று சொல்லிக் கதையை முடித்து விட்டேன். அதன் பின் அவர்தான் ஒரு அசையாமணி போடவேண்டுமென்று யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசாரியிடம் பணம் கொடுத்து மணியை வார்த்துத் தரும்படி கேட்டிருந்தார். நாட்கள் கடந்தன. மணி வார்க்கப் பாரம் எடுத்தவர் இறந்து விட்டார். அவ்வளவுதான். மணியும் இல்லை பணமும் இல்லை. எனக்குத் தமையனார் சொன்னார், "மணி வார்த்து எல்லா வேலையையும் முடித்து விட்டேன். இனி என்னால் எதுவும் செய்ய முடியாது". என்று அப்படியே நாட்கள் ஓடிக் கொண்டு இருக்க, பாருங்கள் முருகனின் பெருமையை ஒருநாள் என்னிடம் வந்து, 'குஞ்சிதபாதம் லண்டனில் 500 இறாத்தல் நிறையுள்ள மணி எடுத்திருக்கிறார். மணி வரும் என்றார். மணி வந்ததும் மணிக்கூட்டுக் கோபுரம் வேலை முடிந்தபடியால் நல்ல நாள் பார்த்து மணியேற்றி அடிக்கத் தொடங்கியது. பின்பு வந்து தான் கோயில் மடம் எல்லாம் நில வேலை செய்யப் போகிறேன் என்றார்'. ஆம் செய்யுங்கோ என்றேன். நானும் கூடவே நின்று வேலை எல்லாம் மேற்பார்வை செய்தேன். பின்பு சுற்று மதிலும் பூசப்பட்டது. பின்பு சொன்னார் 'பழைய திருக்குளத்தைக் கேணியாகக் கட்டவேண்டும் என்றார். அதையும் கட்டி விட்டு 'மகன் கோயிலுக்குப் பெரிய மின்பிறப்பாக்கி அதற்குரிய மின்குமிழ்கள், வயர்கள் அதோடு ஒலிபெருக்கி சாதனம் அதற்குரிய உபகரணங்கள் எல்லாம் அனுப்பியிருக்கு' என்றார். எல்லாம் வந்து கோயிலில் வைத்துப் பாவனைக்குரியவாறு செயல்படுத்தினோம். தன்னாலே ஒன்றுமே செய்ய முடியாது என்று சொன்னவரிடமேயே முருகன் இவ்வளவு வேலைகளையும் செய்வித்தார். இதை எல்லோரும் ஊன்றிப் பார்க்க வேண்டும். இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கக் கும்பாபிஷேகம் விரைவாகச் செய்யவேண்டும் என்று எமது மூத்த தமையனார் ஆறுமுக சபையைக் கட்டினார். மைத்துனர் முருகேசு அவர்கள் கடும் சுகயீனமுற்று வைத்தியசாலையில் மரணப்படுக்கையில் இருந்தவேளை அவர் முருகன் மீது கொண்ட அசையா நம்பிக்கையால் அவரை வேண்டியவாறே தான் குணமடைந்தால் கந்தனின் வசந்த மண்டபத் திருப்பணியை எப்பாடுபட்டும் நிறைவு செய்வதாக உள்ளம் கொண்டார். அது போலவே கந்தன் அருளால் நன்கு குணமடைந்து மனங் கொண்டிருந்த திருப்பணியை இனிது நிறைவேற்றினார். மைத்துனர் செல்லத்துரை, கோயில் வாசலுக்கு நேர் கிழக்குத் திசையில் சுவாமி தீர்த்தம் ஆடவென்று ஒரு கேணி அமைத்தார். மைத்துனர் கதிரிப்பிள்ளை, அருணகிரிநாத சுவாமிக்குக் கோயில் கட்டினார். அது 1972ஆம் ஆண்டு மையப்பகுதியில், தனிமையாகக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இது முறையில் மேற்கொண்டு சிறு துளி பெருவெள்ளமென முருகன் மெய்யடியார்கள் எல்லோரது உடல், உள, வளப் பங்களிப்புகள் திருப்பணியில் நிறைந்தன. 1978ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிச்சை ஐயாவின் செயல்பாடுகள் திருப்தியற்ற நிலையில் நிர்வாகம் அவரை விலக்கிவிட்டு ஸ்ரீலஸ்ரீ தியாகராஜக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் தனது மூத்தமகன் வைத்தியநாத ஐயாவை நித்திய பூசைக்கு நியமித்து, தான் விஷேட காலங்களை எல்லாம் பார்த்து வந்தார். 1988ஆம் ஆண்டளவில் இருந்த அரைகுறை வேலைகள் எல்லாம் நாங்கள் செய்து முடித்து விட்டு இருக்கும் காலத்தில் மூத்த தமையனார் சிவபதம் அடைந்து விட்டார். பின் எங்கள் சின்னத்தமையனாரால் ஆறுமுகசுவாமி சிலை வள்ளி தெய்வநாயகி சிலைகளும் தனித்தனி வார்த்து எடுத்து வரப்பட்டு, 1989ஆம் ஆண்டு ஆனி உத்தரவிழா அன்று மகாகும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடந்தது. இதெல்லாம் ஸ்ரீலஸ்ரீ தியாகராஜக் குருக்கள் தலைமையில் தான் நிறைவெய்தியது.



2000 களில் கருணைக் கந்தனின் அருட்தலம் அழகுற அமைந்திருக்கும் தோற்றம்.

அதன் பின்னர்தான் நாட்டுப் போர்க்காலச் சூழ்நிலையிலும் மக்கள் துன்பம் இல்லாமல் வாழ வழிகாட்டிக் கொண்டு இருக்கிறார் முருகன். மகாகும்பாபிஷேகத்திற்குப் பின் திருவுலா தொடக்கம் மற்றுமுள்ள விழாக்கள் எல்லாம் வெகு சிறப்பாக நடந்து வருகிறது. இப்படி எல்லாம் நடந்து கொண்டிருக்க 1994ஆம் ஆண்டு வைத்தியநாத ஐயா அகாலமரணமடைந்தார். அது ஒரு இரவு 12 மணிபோல் இருக்கும் முருகனின் ஒரு காட்சி. 'எனது பின்பக்கத்திலுள்ள பொருளை எடுப்பதற்கு இரண்டு கருமேனியுள்ளவர்கள் சூலம் கொண்டு பயமுறுத்தினர்' நான் பெரும் சத்தம் போட்டுக் கத்தினேன். வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் விழித்து விட்டார்கள். என்ன என்று கேட்டார்கள். 'நான் மிகவும் ஒரு பயங்கரமான கனவு கண்டேன், அதுதான் கத்தினேன்' என்றேன். அந்த நேரமே அவர் உயிர் பிரிந்தது. மறுநாள் காலை உண்மை நிலை எல்லாம் தெரிந்து கொண்டோம். இப்படி எல்லாவற்றிற்கும் முருகன் காட்சி காட்டிக் கொண்டே இருக்கிறார். பின்பு அவர் இறந்த பின் அவரின் தம்பியார் சுப்பிரமணியம் ஐயா தான்தான் முருகனின் பூசை செய்யப் போகிறேன் என்று கேட்டு அதை மிகவும் பக்தி சிரத்தையுடன் புனிதமாகவும் சிறப்பாகவும் செய்து வந்தார். இது இப்படியிருக்க 1974ஆம் ஆண்டு முருகனிடத்தில் உவர்நீரே உள்ளது. ஆகவே ஒரு நன்நீர்க் கிணறு அமைக்கவென்று எவ்வளவோ முயற்சி செய்தும் சரிவரவில்லை. பின் கருணைவாயில் உள்ள எங்கள் தோட்டக் கிணற்றுத் தண்ணீர் ஊற்றுப் பெருக்காக வந்தவுடன் ஒரு உயரமான தொட்டியை அமைத்து இதிலிருந்து குழாய் மூலம் முருகன் கோயிலுக்குத் தண்ணீர் கொண்டு போனால் என்ன என்று என் மனதில் நினைத்தேன். முருகன் தனக்கு மாத்திரம் என்ன கப்பூதூ அந்தணத்திடல் மக்கள் எல்லோரும் நன்னீர் குடிக்க வேண்டும் என்று நினைத்து விட்டார் போலும் அதற்கு எங்கள் பிரதேசச் செயலாளர் சிறினிவாசன் அவர்கள் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்துடன் தொடர்பு கொண்டனர் அவர்கள் ஆம் என்றதும், எங்களையும் கேட்டார். நாங்களும் ஆம் என்றோம். ஜேர்மன் நிறுவனம் 88 லட்சம் ரூபா செலவில் ஒரு வருடத்திற்குள் வேலை எல்லாம் முடித்து ஆனி மாதம் 21ஆம் திகதி 2001 இல் பிரித்தானியத் தூதுவர் வந்து திறப்புவிழாவும் நடத்தி வைத்தார். இப்போது கப்புதூ அந்தணத்திடல் மக்களுக்குக் கோயிலுக்குக் குடிநீர்ப் பஞ்சமேயில்லை. இதெல்லாம் முருகனின் திருவினையாடலே!

முன்பு எமது தந்தையார் தொட்டில் சுமந்து வந்து தேர் கட்டியபோது எனது சிறுவயதிலேயே தேர் ஒன்று வேண்டும் என்று மனதில் பதிந்து விட்டது. தேர் ஒன்று செய்ய வேண்டும் என்று எப்பவோ மனதில் நினைத்தேன். அதைச் செயல்படுத்தி இருக்கிறார் முருகன். அது நாங்கள் எல்லோரும் சேர்ந்து செய்வோம் என்று நல்லவேலை தெரிந்த சிற்பாசாரியிடம் கதைத்து, 2001ஆம் ஆண்டு தை மாதம் வேலை ஆரம்பிக்கப்பட்டு நடந்து நிறைவடைந்து, இன்று முருகன் அருளால் வெள்ளோட்டமும் இனிது நடைபெற இருக்கின்றது. இந்தக் காலத்தில் சுப்பிரமணியம் ஐயாவும் தான் வெளிநாடு போவதாகப் பூசையிலிருந்து விலகி விட்டார். பின்பு ஸ்ரீலஸ்ரீ தியாகராஜாக் குருக்களின் அனுமதியுடன் அவருடைய மருமகன் ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயக் குருக்கள் பண்டிதர் அவர்களிடம் சகல பொறுப்பும் கொடுத்தோம். அவர் தனது மகன் வாகீஸ்வரன் என்பவரை நித்திய பூசைக்கு நியமித்துவிட்டு 2000ஆம் ஆண்டு திருவிழாவையும் அவரே சிறப்பாக நடத்திய நிலையில் தீர்த்தத் திருவிழா அன்று இரவு இலங்கை இராணுவம் கோயில் சூழல் எல்லாம் நிறைந்து விட்டது. அடுத்த நாள் பிராயச்சித்தமும் முடித்துவிட்டு வந்து விட்டார். கோயில் பக்கம் சனநடமாட்டம் இல்லை. அடுத்தநாள் வாகீஸ ஐயா வேறு ஒருவரையும் துணைக்குக் கூட்டிக் கொண்டு பூசை நடாத்திக் கொண்டு இருக்க இராணுவம் உள்மூலஸ்தானத்தில் புகுந்து கற்பூரதீபாராதனையைத் தானும் செய்யவென்று ஒருவர் செய்தாராம் மேற்கொண்டு வேறுநடைமுறைகள் எல்லாம் வாகீஸ் ஐயா சொன்னார். அத்தோடு இரண்டு பகுதியும் யுத்தம் தொடங்கி விட்டனர். போக்குவரத்து மிகவும் பயங்கரம். நான் வாகீஸ ஐயாவுக்கு "இப்படி நாங்கள் கலங்க மக்கள் ஒருவரும் கோயிலுக்கு வரமுடியாமல் இருக்கிறார்கள். இதெல்லாவற்றையும் முருகன்தான் சரிப்படுத்த வேண்டும். கோயிலில் இருந்து இராணுவம் எப்போது வெளியேறுகிறதோ அதன் பின்தான் பூசை செய்வது அதை முருகன் செய்யட்டும்" என்று சொன்னேன். பூசைகள்

நிறுத்தப்பட்டன. அதன்பின் எங்கள் கரணைவாய் தெற்கு மண்டானில் இருந்து அகோரமான எறிகணை வீச்சுக் காரணமாகப் பெரிய அதிர்வு முருகனின் பூசை நடக்க வழி இல்லையே என மனதில் நினைத்துக் கொண்டு ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயக் குருக்களிடம் போனேன். ஐயா நீங்கள் கோயிலை விட்டு இராணுவம் வெளியேறிய பின் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து பூசையைத் தொடங்குங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன். பல மாதங்கள் கடந்தன. தொடர்ந்து 2001ஆம் ஆண்டு தைப்பூசத்திற்கு இரண்டு நாள் முன்பதாக இராணுவம் வெளியேறிவிட்டது என்றார்கள். உடனே ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயக் குருக்களிடம் சொல்லிப் பூசையைத் தொடங்கும்படி சொன்னேன். தைப்பூசத்தன்று பூசை தொடங்கியது அன்று சுவாமி உள்வீதி உலா நடந்தது பின் ஒழுங்காகப் பூசை நடந்து வந்தது. பின் வைகாசி மாதம் திருவுலாச் செய்வது என்றால் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் எனவும் அறிந்தேன். நாங்கள் சித்திரை மாதம் முருகனிடம் போய், ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயக் குருக்களிடம் போனோம். 'ஏன் ஐயா சம்புரோட்சணக் கும்பாபிஷேகத்தைச் செய்து திருவுலாச் செய்யலாம்தானே' என்றேன். அவரும் 'ஆம்' என்றார். உடனே நாள் பார்த்து திருவிழாவுக்கு முதல் நாள் சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடந்தது. மறுநாள் திருவுலாவும் தொடர்ந்தது. பத்து நாளும் வெகு சிறப்பாக எல்லாம் நடைபெற்றன. பின் ஆனி உத்தரம் சிறப்பாக நடந்தது. அதன்பின் இராணுவம் கோயிலில் இருந்து போனதைப் பற்றிக் கேட்டேன். அது எல்லாம் முருகனின் திருவிளையாடல் என்றார்கள். இராணுவம் வெளி மண்டபத்தில் இரவு படுத்து இருக்கையில் உள் முகட்டுக் கூரையில் இருந்து பாம்பு ஒன்று வீழ்ந்து ஒருவருக்குத் தீண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவர் இறந்தார். இன்னொருவர் கோயில் வாசல் அருகே உள்ள குழாய்க் கிணற்றில் எடுத்துவர அவரும் பாம்பு தீண்டி இறந்தார். பின் கண்ணகி அம்மன் வாசலில் படுத்து இருந்த ஒருவருக்கு வாயாலும் வயிற்றாலும் இரத்தம் போய் அவரும் இறந்தார். வேறு இரண்டுபேர் மோட்டார் சைக்கிளில் போகத் தூக்கி எறியப்பட்டு இறந்தனர். இவையெல்லாவற்றையும் அவதானித்துப் பார்த்து விட்டு இராணுவம் தானாகவே வெளியேறித் தற்போது கப்புதூப் பாடசாலைச் சந்தியில் தற்போது தங்கியுள்ளார்கள். இதிலிருந்து முருகனின் பெருமை எவ்வாறு என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இதுவரை காலமும் மனதில் நினைத்தவை எல்லாம் மேன்மையாகச் செய்த கண்கண்ட தெய்வம் முருகன். அவர் எல்லாம் நிறைவேற்றுவார். 2002ஆம் ஆண்டு வைகாசிப் பூரணைக்கு முதல் நாள் காட்டுக் கந்தன் ஆறு கோணச் சித்திரத் தேரில் ஆறுமுகம் கொண்டு அம்மையார் இருவருடன் அருள் வழங்க வருகின்றார். அடியார்கள் அனைவரும் திரண்டு வந்து அருள் பெறுமாறு வேண்டுகிறோம். எங்கள் மூதாதையர் காட்டுக்கந்தன் பெருமையை மௌனமாக வைத்திருந்த படியால் மக்களுக்கு எல்லாம் தெரியப்படுத்தவேண்டும் என்று முருகன் தூண்டினான். அடியேன் கால எல்லை தெரியாமல் கலங்கினேன். அங்குள்ள கண்ணகி அம்மன் வாசல் புளியமரம் 2000 வயதுள்ளதென்றார். முருகன் கோயில் 2000 ஆண்டுக்கு முற்பட்டது. முருகன் கோயில் என்பதைத் தெரிந்து கொண்டேன். அப்படிப்பட்ட பெருமை கொண்ட இடத்தை மக்கள் எல்லாம் வந்து தரிசிக்க வேண்டும் என்றே நாம் பெற்ற செல்வம் எல்லாம் வையகத்திலுள்ள மக்களும் பெற வேண்டும் என்று சுருக்கமாகவும் விபரமாகவும் தந்து அடியேன் இவ்வளவில் நிறைவு செய்கின்றேன். கப்புதூக் காட்டுக்கந்தனிடம் வாருங்கள். இந்தக் கருணை வள்ளலை கனிந்துருகிக் கேளுங்கள்.

கந்தனின் தேர்த் திருப்பணியும் இனிதுறவே கந்தன் திருவருளால் நிறைவாகி மற்றுமுள்ள திருப்பணிகளும் திருப்பொலிவுடன் நிறைவுறும். கந்தனின் கப்புதூச் சூழல் கண்கொள்ளாக் காட்சியாக ஆன்மீக உணர்வூட்டும் அற்புதப் பதியாக அடியார்களை அணைக்கிறது.

இதற்கிடையில் வல்வெட்டி, மாடந்தையைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெயபாய் என்னும் இருபத்தேழு வயது இளைஞர் ஒருவர் கப்புதூ காட்டுக் கந்த சுவாமி கோவிலை கட்டுவேலை – மேசன் வேலை செய்து வந்தார். கடந்த சில மாதங்களாக இது நடந்து கொண்டிருந்தது. ஏதோ ஒரு காரணத்தினால் கதைக்க முடியாத நிலை

ஒன்று – ஊமைத் தன்மை இவருக்கு ஏற்பட்டு விட்டது. எனினும் வேலை செய்து கொண்டு வந்தார். முருகன் அருள் ஆடல்கள் பற்றி இங்கே வேலை செய்ய வந்தபடியால் அறிந்து கொண்டார். நெஞ்சுருகினார். இடையிட்டு வந்த தன்பேச இயலாத நிலையை மாற்றிவிடும்படி முருகனை வேண்டினார். கோவில் வேலை செய்யும் போதெல்லாம் இந்த வேண்டுதல். சில நாட்கள் கடந்தன. அவர் வீட்டிலே இரவு நித்திரையிலே ஒரு அதிசயக் கனவு. முருகனோடு தொடர்பானதாயிருக்க வேண்டும். அந்தக் கனவு நிலையிலோ 'அம்மா' என அலறினார். அக்கம் பக்கத்தில் படுத்திருந்தவர்களும் இந்த அலறலோடு விழிப்படைந்து விட்டனர். தாயாருக்கு – ஜெய பாலுவின் தாயாருக்க – மட்டற்ற மகிர்ச்சி. ஜெயபால் அன்றிலிருந்து மீண்டுங் கதைக்கத் தொடங்கி விட்டார். முருகன் அருள் விளையாடல் 'ஜெயபாலை' – ஜெயபாலன் ஆக்கி விட்டது. பேசும் ஆற்றலை மீண்டும் பெற்ற வெற்றியாளனாக்கி விட்டது.

கப்புது முருகன் அருளாடல்கள் எல்லாம் வெறுங் கதைகள் அல்ல. முருகன் உள்பொருள். உள் பொருளின் அருளாடல்கள் உண்மையானவை. உள்ளுணர்ச்சியுள்ளவர்கள். உளத் தூய்மைஃபுடையவர்கள் இதையுணர்வார்கள். இவற்றைப் புலப்படுத்தும் ஆற்றல் எல்லாம் ஒருவர்க்கு எளிதில் வராது. உலகறியச் செய்யும் உன்னத ஆற்றலும் அவன் தந்ததே. அவனருளாலேதான் அவன் தாள் வணங்க வேண்டும். இது எல்லோருக்கும் வாய்ப்பதரிது. இவ்வாற்றல் பெற்றவர்கள் மேலானவர்கள். உலகம் அவனருள் ஆடல்களில் திளைத்து உய்தி பெறுக.

*முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணுங்*
*குண்டல நிரையுஞ் செம்பொன் மௌலியுங் கோல மார்பும்*
*எண்டரு கரங்களீராறும் இலங்கெழிற் படைகள் யாவுந்*
*தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ் சரணமுந் தெரியக் கண்டான்.*

*பாடுசிறப் பேறுநுணுப் பாவளைச் சீர்முருதற்*
*கீடுசொல் வோர்தெய்வ மெங்குமிலை - வாடுமனங்*
*கொண்டவமே வாழாமற் கும்பிட் டவனடிக்காந்*
*தொண்டுசெய்வ ரென்றுந் தொடுத்து.*

*பாவெளியி லாடும் பரப்பொருளை வேலவனைத்*
*தூவெளியிற் கண்டு தொழுமின்கள் - சாவழிந்து*
*நீங்குநிலை மேவு நிகரில் பரவின்விற்*
*றூங்குநிலை நண்ணுந் தொடந்து.*

பழமுதிர்ச்சோலை ச. தாமோதரம்பிள்ளை

❊ ❊ ❊

# தேரின் மகத்துவம்

தேரின் தோற்றத்தை மனத்திலே சிறிது சிந்தித்துப் பார்ப்போமாயின் அதன் முழு வடிவமும் கொழுந்து விட்டுச் சுவாலித்து எரியும் ஆகுதியும் அக்கினியின் அமைப்புக்கு ஒத்து இருப்பதைக் காணலாம். இக் கருத்தை உள்ளடக்கியே "சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்" எனக் கூறப்பட்டது. இறைவன் திருக்கரத்தேயுள்ள அக்கினி சங்காரத்தைக் குறிப்பதாகும். இதனைக் கருத்திற் கொண்டே புதுமணத் தம்பதிகள் ஓர் ஆண்டு வரை தேர் முடி பார்க்கக் கூடாது என ஓர் வழக்கமும் உண்டு.

முப்புரங்களையும் அழிப்பதற்குப் புறப்பட்ட பரம்பொருள் பூமியைத் தேராகவும், சூரிய, சந்திரரை அதன் சில்லுகளாகவும், நான்கு வேதங்களையும் அதனை இழுக்கும் குதிரைகளாகவும் அமைய அதில் எழுந்தருளிச் சென்றது. உலகம் முழுவதும் தன்னுள் அடக்கம் என்பதை உணர்த்துகின்றது. மனித வாழ்வின் உற்பவம், பாதுகாப்பு, உடலழிவு, கேடுகள், மறைவு, நன்நிலையுறல் ஆகியவற்றைப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களுள் அமைவன. இவற்றுக்கு உயிர் ஊட்டும் வகையிலேயே கோவில்களில் உற்சவங்கள் நிகழ்கின்றன. கொடியேற்றம் வரையும் உள்ள கிரியைகள் படைத்தலையும் வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தோற்சவம் அருளலையும் குறிப்பன என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதனை நெறிப்படுத்தி வையத்தில் வாழ்வாங்கு வாழ வைப்பதே மதம். அந்நிலை எய்தப் பதிநான்கு படிகளுண்டு. படிகளும் பதின்நான்கு உலகங்களாகச் சிருஷ்டி பெறுகின்றன. இக் கோட்பாட்டைக் கொண்டே தேரடுக்குகள் அமைந்துள்ளன. கீழ் அண்டமாகிய ஏழு உலகங்களும் (அதலம், விதலம், சுதலம், தராதலம், இராசாதலம், மகாதலம், பாதலம்) வியசழ வரி, குமுதவரி, அச்சுப் பூத்தலைவரி, ஆளைத்தொட்டு வரி, கபோதவரி, களிவரி, பூதவரி என வகுக்கப்படுகின்றன. எட்டாவது உலகம் பூலோகம். இது மனிதன் வாழ்வதற்கு அமைந்துள்ளது. மனிதனின் மேல் நிலையைக் குறிக்க மேலண்டமாகிய ஆறு உலகங்களும் (புவர்லோகம், சுவர்க்கலோகம், மஹாலோகம், தவலோகம், பிரம்மலோகம், சிவலோகம்) தேவாசனம், சிம்மாசனம், கம்பங்கள் (பவளக்கால்), பண்டிகை (விமானம்), மகா விமானம் (கர்ண:குடம்), கலசம் (முடி) என உருப் பெறுகின்றன.

மனித வாழ்வுடன் தேரின் அமைப்பை மேலும் ஒப்பிடும்போது, மனிதன் புனிதன் ஆவதற்கு அன்பு, அறம், அருள், அறிவு நெறிகளில் செல்ல வேண்டும். இவற்றை உணர்த்தவே தேரின் சில்லுகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் மார்க்கங்களைக் குறிக்கின்றது. வாழ்க்கைப் பாதையில் எத்தடையையும் வெல்லக் கூடிய நேர்மை, நிதானம், தூய்மை, நீதி என்பன பண்பாய் அமைய வேண்டும். அதனை அறிவுறுத்தவே நான்கு வேதங்களும் குதிரைகளாகித் தேரை இழுக்கின்றன. சீரிய குணங்களே உயர்வு தரும். அதற்குப் புறம்பானவையை கைக் கொண்டால் மோகம், மதம், ராகம், விக்ஷாதம், சோஷம், வைசித்திரியம், அரிசம் ஆகிய குணங்களின் வயப்பட்டு சிற்றின்ப நுகர்ச்சிக்கும், போர்ச்சிந்தைக்கும், ஆரவாரத்தன்மைக்கும் அடிமையாகி அவலமுற நேரிடும். இவ்வுண்மையைத் தேரின் கீழண்டத்தில் பொருத்தப்பட்டுள்ள சிங்க, மகர, யாளி, குதிரை, விக்கிரக, பூதக் கட்டைகள் வலியுறுத்துகின்றன. பூலோக வாழ்வில் மனித மனத்தே; சீவகாருண்யமில்லாத லோப குணம், பிரபஞ்ச ஆசை, விபரீத உணர்வு, அகங்காரம் என்பன கவியும் போது கேடு சூழும். இக் கோரக் குணங்களின் தாக்கத்தைப் பிரதிபலிக்கவே, சிம்மாசனத்தில் நான்கு சிங்கங்கள் இடம் பெறுகின்றன. மனிதனை அஞ்ஞானம், அபிமானம், ராகாதி குணம், துக்கம், விடயப்பற்று பலவித கன்மம் உபாதி, அவத்தை ஆகியன பல வழிகளால் பிணித்து கேட்டுக் குள்ளாக்குகிறது. தேரின் எட்டுத் திசைகளிலும் பூட்டப்பட்டுள்ள யாளிகள் இவற்றை மெய்ப்பிக்கின்றன. இவ்வகை இழிவுகளுள் அழுந்தும்போது மனித மனம் சஞ்சலங்களுக்குட்பட்டு அலையும். இதனைப் புலப்படுத்தவே, தேரில் குஞ்சங்களும் வாகு மாலைகளும் ஒரு நிலையின்றி அசைகின்றன.

வேதாங்க உபாங்க மநு சாஸ்திரங்கள் மணிகளாகத் தேரில் அமைந்து ஒலி எழுப்புகின்றன. 32 தத்துவங்களும் 32 குத்துக்கால்களாக (பவளக்கால்) தேரின் மேற் பகுதியைத் தாங்கி நிற்கின்றன. (சுத்தவித்தை, காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மூலப்பிரதி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், நிலம், நீர், தீ, வளி, வான், மெய், வாய், கண், மூக்கு, செவி, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆகியன 32 தத்துவங்கள் ஆகும். புனித வாழ்வு அமைப்பதற்கு நெஞ்சில் புனிதம் குடி கொள்ள வேண்டும். இவற்றைத் தெளிவுபடுத்தத் தேரின் விதானமாகப் பந்தல் அமைந்து அழகூட்டியும் மனிதன் புனித நிலைக்கு உள்ளாகும்போது மனதில் பதிந்து இருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் அழிந்து மனம் ஒடுங்கும். இப்படி முறையை நிதர்சனப்படுத்தவே தேரின் பண்டிகை மேலோங்கி மூன்று நிலைக்குள்ளாகி ஒடுங்கிச் செல்கின்றது. இவ்வாறு ஒருமுகப்படுத்தப்பட்டுப் புனிதப்பட்ட மனம் ஒளிமயமாகப் பிரகாசிக்கும். இத்தன்மையை மகாவிமானம் (கர்ணகூடம்) தெளிவுறுத்தும். புனிதன் உலகுக்கு நிழல்போல் இருந்து நலம் செய்விப்பான். இத்தத்துவத்தைக் கொண்டுள்ளது உச்சிக்குடை.

தேர் என்பது கோயிலின் அமைப்பு போன்றது எனவும், தேரின் அடிப்பாகம் பூலோக வாழ்க்கையையும் மேல்பாகம் சுவர்க்கலோக வாழ்க்கையையும் சித்தரிக்கின்றன என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது. இதைவிட மனிதனின் தேகத்தையும் உருவகிக்கும் ரீதியில் தேர் அமைந்துள்ளது எனவும், அதன் சிங்காசனமே இருதயத்தின் பிரதியாமிசம் எனவும் கூறப்படுகிறது.

தேரின் பகுதிகளை 3 பெரும் பகுதிகளாக வகுக்கலாம். அவை பிரம்ம பாகம் (அடிப்பாகம்), விஷ்ணுபாகம் (நடுப்பாகம்), ருத்திரபாகம் (மேல்பாகம்) என்பனவாம். தேரின் முன்பக்கம் பூர்வபக்கம் எனப்படும், இது கிழக்குப் பக்கம் அமையும். இது மூலமூர்த்திக்கு உரியதாகக்கருதப்படும். தெற்குச்சிவபாகமாகவும், மேற்கு (பின்) விஷ்ணு பாகமாகவும், வடக்கு பிரம்ம பாகமாகவும் பக்கங்களின் தன்மையுடனும் விக்கிரக வரி வகுக்கப்படுகிறது. விக்கிரக வரியின் மூலைகளிலேயே சம்ஹாரத் தோற்றங்கள் அமைகின்றன.

இந்து சிற்ப அமைப்பு முறைக்கான சாஸ்திரங்களின் அடிப்படை ஆகம விதிகளே. இவற்றைத் தழுவியும் விரிவாகவும் சிற்ப சாஸ்திரங்கள் அமைந்துள்ளன. தேர் அமைப்புக்கும் கட்டடக்கலைக்குமுள்ள தொடர்பு பற்றி நோக்கும்போது மூலமூர்த்திக்கேற்பக் கோயில் அமைப்பும் இதன் கர்ப்பக்கிரஹக் காற்புறவாய் அமைப்பிற்கேற்பத் தேர் அமையும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. கோயிலும் தேரும் அமைப்பில் ஒரே தன்மையானவை.

இறுதியாக யாழ்ப்பாணத் தேர் அமைப்பினை நோக்கும்போது ஆரம்ப காலத்தில் இந்தியத் தொடர்பும் பிற்பாடு பல்வேறு சமூக அழுத்தங்களினால் யாழ்ப்பாணம் தனித்தது போன்ற நிலையும் இருந்தது. இதன்போது இங்கிருந்த ஸ்தபதிகள் ஏற்கனவே இத்துறையிற் பரிச்சயத்துடன் இத்துறையில் ஈடுபட்ட தன்மையும் அவதானிக்க முடிகிறது. ஆயினும் சமயச்சார்பான ஒன்றாகவும் சமயத்தின் ஒவ்வொரு கூறுகளுமே புனருத்தாரணமும் புதிதாக உருவாக்கலும் செய்து அவற்றை நிலை நிறுத்தும் சிந்தனையும் உள்ள இச் சமூகத்தில் தேர் சமய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு நோக்கில் ஆராயப்பட்ட தேரின் மகத்துவம் எமது சிற்றறிவால் கூறுவதற்கு அரியது. இப்படியான மகத்துவம் வாய்ந்த தேரைக் கப்புதூ முருக மூர்த்தி கோவில் மெய்யடியார்களில் ஒருவராலேயே தனித்து நின்று அமைப்பித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஊர் கூடி நின்று தேர் இழுத்தல் என்பார்கள். மக்கள் எல்லோரும் பெருமளவில் திரண்டு வந்து வெள்ளோட்ட விழாவைச் சிறப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அடியார்க்கு முருகப் பெருமானின் பேர் அருட்கடாக்ஷம் கிடைக்கப் பெற வேண்டுகின்றேன்.

*பிரசங்க பூபதி*
*சிவநெறிச் செம்மல்*
*காரை கு. சிவராஜ சர்மா*



ஆறுமுக சுவாமி தாம்பர விக்ரகம்

சித்திரத் தேரைச் சிறப்புற வடிவமைத்த 'சிற்ப கலாரத்தினம்' சிற்பாசாரியார் பாலச்சந்திரனுடன் தேர்த் திருப்பணித் தலைவர் ச. தாமோதரம்பிள்ளை அவர்கள்.






சித்திரத் தேர்ப் பீடத்தின் கட்டுமானத் தோற்றம்.

சித்திரத்தேரின் பாகங்களும் அழகுறு சிற்பங்களின் தோற்றங்களும்.





சித்திரத்தேரின் பாகங்களும் அழகுறு சிற்பங்களின் தோற்றங்களும்.

தேர் கட்டுமானப் பணிகள்.





தேர் கட்டுமானப் பணிகள்.






தேர்முட்டிக்கான கூரை அமைப்பில்......







தேர்த் திருப்பணியின் இன்னொரு பகுதியான தேர்முட்டியின் கட்டுமானப் பணியின் ஒரு கட்டம்

தேரின் சிற்ப அமைப்புக்கள்









உ
ஓம் முருகா

"கரணவாய் - கப்புதூக்
# காட்டுக் கந்தன் பாடல்கள்

கரணவாய்
பழமுதிர்ச் சோலை
திரு. ச. தாமோதரம்பிள்ளை
அவர்களால்
இயற்றப் பெற்றது

''மஹாவித்துவான்''
அவர்களால்
பரிசீலிக்கப்பெற்றது

தேவஸ்தான வெளியீடாக
வெளியிடப்பெற்றது
2002

# கப்புதூக் கந்தனிடம் வாருங்கள்

ராகம் : கானடா　　　　தாளம் : ஆதி

பல்லவி

கருணை மழை பொழியும் கந்தனிடம் வாருங்கள்
திருவளர் கப்புதூவூர் திகழ்காட்டுக் கோயிலிலே

அநுபல்லவி

அருகில் கணபதியும் அருணகிரியோடு
இருமாதர் புடைசூழ அருளாட்சி வழங்கிக்

சரணம்

1
முத்தமிழ்த் தெய்வம் எங்கள்
முருகன் முத்துக்குமரன்
மோகன மயிலேறி
வருவான் திருமுருகன்
சித்தம் மகிழ்ந்துபாடு
சேந்தன் வருவான் நாடி
கத்தும் குயில் கப்புத்தூவின்
காட்டுக் கந்தன் அருள்தருவான்

★ ★ ★

2.
உங்கள் குறை சொல்லிக் கேட்டால்
ஓடி வந்து தீர்த்திடுவான்
தங்கஆறு முகச் சிரிப்பால்
தரணி ஆட்சி நடத்திடுவான்!
மங்களமும் ஆறுதலும்
எங்குதான் கிடைக்கிறதோ
அங்கே ஆறுபடை வீடாய்
அமர்ந்த கப்புதூக் கந்தன்!

★ ★ ★

3.
கவலை தீர்க்கும் கப்புத்தூவூர்
காட்டுக் கந்தன் கோயிலுக்கே
அவனியோர் அனைவருமே
அணிதிரண்டு ஓடிவாரீர்!
புவனியில் கவலை போக்கும்
புண்ணியன் கந்தனிடம்
கவலையைக் கூறிடுங்கள்
கடிதில் துயர் நீக்கிடுவான்!

# கப்புதூக் கருணை அழகன்

ராகம் : கல்யாணி　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

கப்புதூக் கந்தனிடம் வாருங்கள் – உங்கள்
கவலையைக் கூறுங்கள்
கருணையைப் பாருங்கள்

அநுபல்லவி

முப்பொழுதும் கந்தனை நாடுங்கள் – கந்தன்
இப்புவிதனில் உங்கள்
இடர் தீர்ப்பான் வாருங்கள்

சரணம்

1　காட்டுக் கந்தன் அழகன்
　　காடு மலை　கடல் ஓரம்
வீட்டில் குடியமர்வான்
　　வீடாறு படையுடையான்
காட்டுக் கதிர் காமம்
　　கவின் நல்லை சந்நிதியும்
நாட்டும் மாவிட்ட புர
　　நாயகனாம் கருணைக்

★ ★ ★

2　எங்கள் குல தெய்வம்
　　எழில் வடி வேலவன்
உங்கள் குறை தீர்ப்பான்
　　ஒளிர் கப்புதூக் கந்தன்
மங்களம் தந்திடுவான்
　　மனக்குறை தீர்த்திடுவான்
உங்கள் மனம் உருக்கி
　　உவகையும் தந்திடுவான்

★ ★ ★

# கண்கண்ட கலியுகத் தெய்வம்

ராகம் : ரஞ்ஜனி　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

கண் கண்ட கலியுகத் தெய்வம் – எங்கள்
கப்புதூக் காட்டுக் கந்தன்
கருணை வடிவழகன்.

அநுபல்லவி

பண்கண்ட கனிமொழி
பசுந்தமிழ் வாழவைத்தான்
மண்கண்ட கருணைவள்ளல்
மயிலவன் காட்டுக் கந்தன்

சரணம்

1　உள்ளம் கசிந்துருகி
உவந்தருளைக் கேளுங்கள்
வள்ளல் கப்புதூக் கந்தன்
வழங்குவான் நல்லருளை
தெள்ளத் தெளிந்த ஞானம்
திருக்குமரன் அருள்வான்
அள்ளக்குறைந்திடாத
ஆனந்த நிலையருள்வான்.

★ ★ ★

2　சொற்பனத்தில் தோன்றிச்
சோபனங்கள் தருவான்
அற்புதக் கப்புதூவில்
அவதரித்த கந்தன்
நற்புனிதப் பதத்தை
நல்கியே ஆட்சி செய்வான்
சிற்பரன் காட்டுக் கந்தன்
சிறந்த அருள் புரிவான்.

## தந்தைக்குக் குருவான கந்தன்

ராகம் : ஸிந்து பைரவி தாளம் : ஆதி

பல்லவி

தந்தைக்குக்குருவான கந்தன் – என்றும்
தரணியைக் காத்தருள்வான் சேந்தன்

அநுபல்லவி

முந்தைப் பிரணவத்தின்
பொருள் கேட்டான் முருகன்
அந்தப் பிரமன் திகைத்தான்
அயனைச் சிறையிலிட்டான்

சரணம்

1 தேவர் சிறைமீட்ட
செல்வன் திருமுருகன்
சூரர் குலமழித்த
சுப்பிரமணியன் குகன்
சேவலைக் கொடியாக
வாகனம் மயிலாகச்
சூரனுக்கருள் செய்த
சுந்தரக் காட்டுக் கந்தன்

★ ★ ★

2 மூவுலகம் வாழ
மூலமும் ஆனவன்
ஆவலாய்ச் சிந்தையிலே
ஆறுமுகன் பதம் கொற்வாய்
பூவுலகில் பேரின்பப்
பெரு வாழ்வு தந்திடுவான்
பேர் சொல்லி நெஞ்சினிலே
வேர் கொள்ள வாருங்கள்

★ ★ ★

உ

*ஓம் முருகா*

## பல்லவி

கருணையிலே என்றிருந்தேன் உந்தனைக்காண
காட்டுக் கந்தனைக் காண
நான் கடைசிவரை கேட்டிருந்தேன் உந்தனை நாட
முருகா உந்தனைப்பாட – முருகா

(கருணை.......)

## அநுபல்லவி

கவலையெல்லாம் மறந்திருந்தேன் உந்தனைக்காண
கனவினிலே காட்சிபெற்றேன் வந்தெனையாள
முருகா நீ வந்தனை ஆள

காடுமலை ஏறி எங்கும் சேவை நடக்குது
முருகா சேவை நடக்குது
நின் கழலடியை பாட நெஞ்சம் நாடிநிற்குது – முருகா

கடலோர வயல்வெளியாய் காட்சிசெய்யுது – வேல் சாட்சி சொல்லுது
கானமயில் கனிந்து ஆடி ஆட்சிசெய்யுது
காட்டுக் கந்த மயிலாகி இங்கு உவகை கொள்ளுது – முருகா

(கருணை.......)

## சரணம்

துயர் துடைத்து எனை நடத்தி வந்த தெய்வமே – தமிழ் தந்த தெய்வமே
நீ பகை விரட்டி அன்பு செய்த கந்த தெய்வமே
முருகா....... எம் காட்டு கந்த தெய்வமே

ஆதியாக வீற்றிருந்து ஆட்சி செய்கிறாய்
எனை ஆடவைத்து ஆறுமுகம் காட்டி நிற்கிறாய்
முருகா இக் காட்டில் நிற்கிறாய்

கலியுகத்தை ஆக்கி வைத்த கந்த தெய்வமே
கலையாவும் கூடி ஒரு கோயில் செய்யவே
காலமெல்லாம் காத்திருப்பேன் உந்தனுக்காக –முருகா

உ
கந்தன் துணை

# கரணவாய் – கப்புது
# காட்டுக் கந்தன்

# கீர்த்தனைகள்

## இயற்றியவர்

“கவிமாமணி” “கலாரத்னா”

“கலாபூஷணம்” “மஹாவித்துவான்”


பிரம்ம ஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் M.A. J.P

யாழ்ப்பாணம் (இணுவில்)


இ°°து


ஷெ. தேவஸ்தான வெளியீடாக
வெளியிடப்பெற்றது

2002

உ
கந்தன் துணை.

# கரணவாய் – காட்டுக் கந்தன் கீர்த்தனைகள்

## மாணிக்கப்பிள்ளையார் ஸ்துதி

1 ராகம் : திலங்

தொகையறா

மருப்பொசித்து மாமேரு மலையின் மீதில்
விருப்புடனே பாரதத்தை வரைந்த தீரா!
அருட்பொலியும் அழகான கப்புதூவில்
ஆனந்த அடவிதனில் அமர்ந்த கந்தன்
திருப்பாடல் தீந்தமிழிற் பாட அருள்
தித்திக்கத் தித்திக்கத் திருக்கு மரன்
குருப்பாதம் பணிந்துமனம் உருக அருள்
குஞ்சரனே மாணிக்க விநா யகனே!

★ ★ ★

2 ராகம் : திலங் தாளம் : ஆதி திஸ்ரம்

பல்லவி

ஆணிப்பொன் அம்பலவன்
அணைத்துஆடும் கணபதியே!
மாணிக்கப் பிள்ளையாரே!
மயிலவனைப் பாட அருள்

அநுபல்லவி

காணிக்கைத்திரி கரணங்களை
கணபதியே அர்ப்பணித்தேன்!
காண உள்ளம் சிலிர்க்கும் கப்புதூக்
காட்டுக் கந்தன் பாட்டுப் பாட

சரணம்

1 கண்டவரின் கவலையெல்லாம்
கணப்பொழுதில் தீர்த்து வைப்பான்
பண்டு தோற்றம் அறிவொணாப்
பாலகதிர் காமனவன்
மண்டலத்தில் கப்புதூவூர்
மன்னு காட்டுத் தலத்தினிலே
எண்டிசையும் போற்றிடவே
எழில்வேலன்ஏ ழிசைபாடவே.

★★★

2 பழம்நீயே பழம்நீ என்றே
பாசத்துடன் அணைத்தாய் அன்று
பழமான சோதரனைப்
பக்தியுடன் பாட அருள்
அழகான கப்புதூவூர்
ஆனந்தக் காட்டில் அமர்ந்தவனை
மனமாரத் தமிழிற் பாடி
மலரடிகள் போற்ற அருள்.

★★★

2 ராகம் : பாகேஸ்ரீ

தொகையறா

கப்புதூக் காட்டுக் கந்தன்
கருணையே வடிவழகன்
அப்பனவன் சந்நிதிக்கே
அனைவரும் திரண்டு வாரீர்!
எப்படியும் கந்தனவன்
எழில்முகத்தைக் கண்ட கணம்
செப்பரிய நல்லருளைச்
சொரிந்திடுவான் வினை தீரும்.

★ ★ ★

ராகம் : பாகேஸ்ரீ தாளம் : ஆதி

பல்லவி

தீராத பிணி தீர்ப்பான் உந்தன் – வாழ்வில்
ஆரா அமுதனைய கப்புதூக் காட்டுக் கந்தன்

அநுபல்லவி

மாறாத நோய்களுக்கும்
மருந்து கப்புதூக் கந்தன்
ஆறாத கவலைகட்கும்
அவனே மருந்து சேந்தன்

சரணம்

சரணம் சரணம் என்றே
சந்நிதி வாயில் நின்றே
சரவணனைத் துதிப்பாய்
சௌபாக்கியம் தந்தருள்வான்
கரமலர் வேல் ஏந்தும்
கதிர்காமக் கந்தனவன்
புரக் கப்புதூக் காட்டுப்
புண்ணியத் தலத்தவன்

★ ★ ★

மத்யம காலம்

சந்நிதி வாயில் நின்று கந்தன் பதம்
சரணடைந்தே பக்தி செய்து துதி
உன்முகம் கண்டே உத்தமன் கந்தன்
உவந்து அபயகரம் அசைத்திடுவான்
கன்மவினை தீரும் கனிந்த புன்னகையைக்
கப்புதூக் கந்தன் காட்டிடுவான்
நின்பவம் அகலும் நீணிலத்தில் துயர்
நீக்கிவான் – போக்கிடுவான்
'காத்திடுவான்.

3 ராகம் : பெஹாக்

தொகையறா

கையதனில் வேலேந்தும் கந்தனையே காணக்
கப்புதூக் காட்டுத்தலம் கடுகிநீர் வாரீர்
வையகத்தில் வளமெல்லாம் அருளுகின்ற கோயில்
வலம் வந்து சந்நிதியில் வேலன்முகம் காணீர்
அய்யனவன் அயிலேந்தி அல்லலெலாம் தீர்ப்பான்
அவன்பதமே சரணடைவார் ஆனந்தம் பெறுவார்
துய்யதலக் கப்புதூர்க் கோயிலுக்கே வாரீர்
துயர்துடைக்கும் வேலனவன் தூய அருள் புரிவான்.

★★★

ராகம் : பெஹாக் தாளம் : கண்டசாபு

*பல்லவி*

சரவணனும் சரணமலர்
சரணடைந்தார்க் கருள்தருவான்
கரதலத்தில் வேலை ஏந்தும்
கப்புதூக் கந்தன் குகன்.

*அநுபல்லவி*

புரமதுவாம் கப்புதூவில்
புனித காட்டுக் கந்தனவன்
அரவணைத்தே வரமருளி
அருள் புரிவான் ஆறுமுகன்

*சரணம்*

1 பக்தியொடு திருப்புகழை
பாடிக்கந்தன் சந்நிதியில்
நித்தியமும் தொழுதிடவே
நிமலன்வரம் தந்திடுவான்
சக்தியுமை மைந்தனவன்
சண்முகன் சடாக்ஷரத்தான்
சித்தமெலாம் உருக்கும் குகன்
சித்தியெலாம் தந்திடுவான்.

★★★

2 முருகன்மலர் முகத்தினிலே
திருவருளின் ஒளிதெரியும்
உருகிமனம் உவந்தவனை
உளமாரத் தொழுதிடுவாய்!
கருக்கிடுவான் தீவினைகள்
கப்புதூக் காட்டுக்கந்தன்
பெருவரமும் அருளி வாழ்வில்
பேரின்பம் தந்திடுவான்.

# பதம்

4. ராகம் : தேஷ் மிஸ்ரசாபு

தொகையறா

நிலவும் அனல்போல உடலை எரிக்குதே!
நினைவும் முருகனின் மயிலால் உருகுதே!
மலரும் கருகுதே விரகம் பெருகுதே!
மாதுஎன்நிலை மயிலன் தெரியானோ?
தலமாம் கப்புதூக் காட்டுக் கந்தனை
தையல் எண்ணியே தவிக்கிறான் என்றேன்
நிலையைச் சொல்லி நீ தலைவன் கந்தனை
நீயே அழைத்திங்கு வாடி என் ஸகி.

★ ★ ★

ராகம் : தேஷ் தாளம் : மிஸ்ரசாபு

பல்லவி

எந்தன்நிலையதைக் கந்தனிடம் சொல்ல
உந்தன் தூதினை நாடினேனடி

அநுபல்லவி

மந்தமாருதம் செந்தணலாக
வந்துவீசியென் னுளத்தை வாட்டுதே!

சரணம்

1 கனவும் நினைவிலும் கப்புதூக் காட்டுக்
கந்தன்காதலால் கரைகிறேனடி!
மனம் குளிர்ந்திட மயில்மீதில் வந்தே
மாதுஎன்மன மையல் தீர்ப்பானோ?

2 காதல் பொங்குதே கப்புத்தூக் காட்டுக்
கந்தன்காதலால் கரைகிறேனடி!
பாதம்நினைந்திடும் பாவைக்கருள்வானோ?
ஆதரவுதந்தே என்னை ஆள்வானோ?

5 ராகம் : சிவரஞ்ஜனி

தொகையறா

எல்லோரும் வாருங்கள்!
எழில் முருகன் வாசலுக்கே!
நல்லாசி தந்திடுவான்
நாயகன்கப் புதூக் கந்தன்
பொல்லாத வினையகற்றிப்
பேரின்பம் தந்திடுவான்
கல்லான மனத்தையுமே
கசிந்துருக் கிடுவான் கந்தன்.

★ ★ ★

ராகம் : சிவரஞ்ஜனி தாளம் : ஆதி-சதுரஸ்ரம்

பல்லவி

மனதை உருக்கிடும் மயிலவன் வருவான்
அனவரதம் அருளை அள்ளியே தருவான்

அநுபல்லவி

வனக்குற வள்ளிதேவ சேனாம ருவிடத்
தினம் கப்புதூக் கந்தன் திருவடி போற்றிட

சரணம்

அற்புதங் கள்கண்டே ஆத்மா உருகிநிற்கும்
சிற்பரன் சேந்தனவன் திருக்கோயில் வாசல் வாரீர்
கப்புதூக் காட்டுக்கந்தன் கருணைக் காட்சியைப் பாரீர்
இப்பிறவியின் பயன் எய்த அவனைக் காணீர்.

மத்தியம காலம்

தொன்மைநிறைந்த திருக் கோயிலைப் பாரீர்
தோகைமயிலழகன் திருமுகம் காணீர்!
கன்மவினைகளெல்லாம் கருகிடும் பாரீர்
கப்புதூக் காட்டுக் கந்தன் புதுமையைக் கேளீர்!
ஜென்மமெடுத்த பயன் தன்னையே உணர்வீர்!
ஜெகவாழ்வினில் சித்தி சேர்வதைத் தெரிவீர்!
வன்னமயில் வீரன் வடிவழகைக் காணீர்
வாழ்வினில் பெரும்பேறு வாழ்த்திட வாரீர்.

★ ★ ★

6 ராகம் : பிருந்தாவனஸாரங்கா தாளம் : கண்டசாபு

தொகையறா

செப்பரிய அற்புதங்கள்
சேந்தன்புரி கின்றான்
இப்புவியில் மாந்தருக்கே
இன்னருளைச் செய்வான்
கப்புதூக் காட்டினிலே
கந்தனவன் அமர்ந்தே
ஒப்பரிய அருள் தருவான்
கப்புதுவூர் வாரீர்.

★ ★ ★

ராகம் : பிருந்தாவனஸாரங்கா தாளம் : கண்டசாபு

பல்லவி

கப்புதூக் காட்டுக் கந்தன்
கதை சொல்வேன் கேளீர்!
செப்பரிய சேந்தன் கதை
அற்புதங்கள் பாரீர்!

அநுபல்லவி

அப்பனவன் ஆறுமுகன்
அமர்ந்ததிருக்கோயில்
எப்போ தோன்றிற் றென்று என
எவருந் அறியாரே!

சரணம்

விற்பனனாம் பக்தனிடம்
சொற்பனத்தில் தோன்றி
சிற்பமாக அமர்ந்த நிலம்
சீராகக் காட்டி
நுட்பமுடன் அகழச்செய்து
நின் உருவம் காட்டி
உற்பவமு மானபெரும்
அற்புதங்கள் செய்தான்.

★ ★ ★

2 திருமுருகன் சிலைகளுடன்
தேவிமார் சிலைகள்
அருணகிரி சிவனுமையும்
அழகுகண பதியும்
பெருமைமிகும் சிலம்பேந்தும்
பெண்ணவள்கண் ணகியின்
அருமைமிகும் அழகுசிலை
அகழச் செய்து வந்தாய்.

★★★

3 ஒல்லாந்தர் போத்துக்கீசர்
ஒளித்துவைத்த சிலைகள்
எல்லோர்க்கும் காட்சிகாண
எழிலருளும் புரிந்தான்
முன்னோர்கள் பூஜைசெய்த
முதுபெரிய கோவில்
பின்னாளில் காட்டிவைத்தே
பேரருளைப் புரிந்தான்.

★★★

4 பெருங்கோயில் பெருங்குளமும்
பெருங்காட்டு நிலத்துள்
அருங்கோலம் காட்டியதை
அனைவருமே கண்டார்!
தரும்பக்தி மேலீட்டார்
தாமோதரன் முன்னோர்
அரும்பாடு பட்டுக் கோயில்
அழகுறவே அமைத்தார்.

★★★

5 எண்ணரிய அற்புதங்கள்
எழில்வேலன் செய்தான்
நண்ணியவர் பிணிதீர்த்து
நலம்யாவும் அளித்தான்!
பண்ணிசையால் புகழ்பாடும்
பக்தருக்கு அன்பால்
திண்ணியநல் லனயாவும்
திருவருளால் கொடுத்தான்!

★ ★ ★

6 தீர்த்தமது நன்னீராய்
திருக்கோயில் தனிலே
சீர்த்திமிகு பக்தனவன்
சேந்தனையே கேட்டான்
மூர்த்தியவன் மனமிரங்கி
முதுகாத தூரம்
நீர்த்தடத்தை நிலமகழ்ந்து
நன்னீரைத் தந்தான்.

★ ★ ★

7 வேண்டுவார் வேண்டுவதை
வேலவனும் தருவான்!
காண்பரிய கப்புதூவூர்
கோயில் வலம் வருவீர்!
ஆண்குழவி பெண்குழவி
ஆறுமுகன் தருவான்!
பூண்விரதக் கப்புதூவூர்
பொலிவு பெற வாரீர்!

★ ★ ★

7. ராகம் : மனோலயம்

ஏட்டினிலே அருணகிரி
ஏழிசையில் புகழ் பாடப்
பாட்டினிலே சொக்கி நீயும்
பாவலனுக் கருள் தந்தாய்!
நாட்டினிலே தெய்வீகம்
நாட்டிடும் கப்புதூவூர்க்
காட்டினிலே கோயில் கொண்ட
கந்தாவுன் கழல் கதியே!

★ ★ ★

ராகம் : மனோலயம் தாளம் : ஆதி

பல்லவி

உன்னையல்லால் வேறு கதியுளதோ? – முருகா
கவின் தமிழ்க் கப்புதூக்
காட்டுக் கந்தா உலகில்

அநுபல்லவி

வன்னமயில் அழகா! வடிவேல் அழகா!
நினைச் சரண் அடைந்தேன்
நீயே வந்தருள் வாராய்!

சரணம்

1 சோலைக்கப் புதூக் காட்டில்
கோவில் கொண்ட குமரா!
வேலைத் தூக்கிடும் கந்தா!
வெவ்வினைகள் தீராயோ?
ஆலைக்கரும்பென என்
அல்லலைநீ அறியாயோ?
காலைப் பிடித்தழுதேன்
கந்தாநீ இரங்காயோ!

★ ★ ★

2 தேவரின் ஓலம் கேட்டே
தேடிவந் தருள்செய்தாய்!
கோபம் மிகுந்து கொடும்
சூரனையேவ தைத்தாய்!
ஆவலாய் ஔவையவள்
ஆனந்தத் தமிழ்சு வைத்தாய்
பூவலம் வந்த கந்தா!
பூம்பதம்நீ தாராயோ?

★ ★ ★

8 ராகம் : ஆபேரி

தொகையறா

கப்புதூர்க் காட்டினிலே
கனியொன்றுண்டு
கந்தனெனும் அருட்கனியின்
காந்தஅருட் சுவையை
இப்புவியில் மாந்திடவே
எழுந்தோடி வாரீர்
இனியகுகன் முகம் கண்டால்
இன்னலெலாம் தீரும்
இப்பிறவிப் பயனெய்தக்
கப்புதூவூர்க் கந்தன்
இணையடிகள் அருள் பெறவே
எழுந்தோடி வாரீர்!
அப்பனவன் ஆறுமுகன்
அடிமலரைப் பிடித்தால்
அவனியிலே பல வினைகள்
அணுகாதே வாரீர்.

★ ★ ★

ராகம் : ஆபேரி தாளம் : ஆதி

பல்லவி

வினை தீர்க்கும் வேலனை நாடு – மனமே
மனமாரக் கப்புதூவூர்க்
காட்டுக் கந்தனைப் பாடு

அநுபல்லவி

உனை ஆளும் உமைபாலன்
உள்ளத்திலே உறைவான்
மனைமாட்சி கல்வி கலை
மாநிதியம் நிறைப்பான்

சரணம்

1 கலியுகத் தெய்வமே கந்தனென் றுணர்வாய்!
நலிவெலாம் நீக்கிடும் நாயகனும் குகனே!
வலிமையும் தருவான் வளங்களும் அருள்வான்
மலியும் அருள்பொழிவான் மயிலவனைத்துதிப்பாய்.

2 எத்தனையோ அற்புதங்கள் ஏந்தல்முருகன் செய்தான்
அத்தனையும் ஆத்மாவை ஆனந்தநிலைநிறுத்தும்
சித்தமெல்லாம் கந்தன் சேவடி வைத்துத் துதி
இத்தரை வாழ்வில்என்றும் இன்பமெல்லாம் தருவான்

3 மங்கையரின் மனம்குளிர மாங்கல்யம் அருள்வான்
பொங்கும் மதலைவரம் தம்பதிகட்கருள்வான்
மங்கள வாழ்வருள்வான் மயிலன் கப்புதூர்க் கந்தன்
எங்கனும் இன்பமே இறைஞ்சிடுவான் வாழ்வில்.

★★★

9 ராகம் : ஜமன் கல்யாணி தாளம் : கண்டசாபு

### தொகையறா

ஊர் கூடி வடம் பிடித்து
ஓம்முருகா காவென்றே பக்தியுடன்
தேர் இழுக்கத் திருத்தலமாம்
கப்புதூக் காட்டுக் கோயில் வீதி
ஆர்வமுடன் பவனிவரும்
ஆறுமுகன் வள்ளிகுஞ் சரியாரோடு
பார் புகழும் அருட்காட்சி
பார்த்துமெய் சிலிர்த்திடவே வாரீர் வாரீர்.

★ ★ ★

ராகம் : ஜமன் கல்யாணி தாளம் : ஆதி திஸ்ரம்

### பல்லவி

சித்திரத்தேர் மீதிலேறி அத்திரவேல் கையிலேந்தி
கப்புதூக் காட்டுக்கந்தன் கண்குளிரக் காட்சி தந்தான்

### அநுபல்லவி

சக்தியராம் வள்ளிதேவ குஞ்சரியும் மருங்கமர
அத்திமுகன் அரன்உமையும் ஆனந்தக் காட்சி கண்டார்

### சரணம்

1 ஆறுகோணச் சித்திரத்தேர் வாகுமாலை அசைந்தாட
வீறுபக்தி கொண்டபக்தர் வேல்முருகா எனத்துள்ள
ஏறுமயில் தோகைவிரித்து ஆடிஆடி வீதிவர
ஆறுமுகன் அஞ்சலென அபயகரம்அசைந்தாட்கொள்ள

2 நாதஸ்வர கானம்உளம் நைந்துருக்கத் தவில்முழங்க
காதலுடன் பக்தரெலாம் காட்டுக்கந்தன் புகழ்பாட
வேதகோஷம் விண்ணளாவ வேதியரும் ஸாமமோத
பூதலத்தில் கப்புதூவூர் புண்ணியத் தலத்தினிலே.

★ ★ ★

10 ராகம் : ஹமீர் கல்யாணி

தொகையறா

தலக்கப்பு தூக்காட்டுத்
தளிர்வேலன் கந்தனது
மலர்முகத்தைக் கண்டேஎன்
மனக்குறைகள் தீர்ந்துவிடும்
அலர்கதிர்வேற் கந்தனவன்
ஆனந்தம் தந்திடுவான்
வலம் வந்து திருக்கோயில்
வாசலிலே வணங்கிடுவேன்.

ராகம் : ஹமீர் கல்யாணி தாளம் : ஆதி சதுரஸ்ரம்

பல்லவி

நெஞ்சத்திருந்து கந்தன்
நர்த்தனம் ஆடுகின்றான்
அஞ்சல் என அபயம்
அசைத்தவன் காட்டுகிறான்

அநுபல்லவி

குஞ்சரி வள்ளியுடன்
குலவிடும் வேல் ஏந்தி
தஞ்சம் அடைவோர்க்குத்
தன்னருள்தான் புரிந்து

சரணம்

1 கப்புதூக் காட்டுக்கந்தன்
கருணை வடிவழகன்
எப்போதும் என் நெஞ்சில்
ஏகாந்த நடம் புரிவான்
முப்போதும் குகன் பாதம்
முத்தமிழ் சூட்டிடுவேன்
செப்பியே சடாக்ஷரம்
செபித்தே அருள்பெறுவேன்

★ ★ ★

2 எங்குபார்த்தாலும் கந்தன்
எழில்முகமே தோன்றும்
மங்கல வள்ளியொடு
மாதுகுஞ் சரிதோன்றும்
பொங்கிடும் வேல் தோன்றும்
பொலிசேவற் கொடி தோன்றும்
தங்கமா மயில் தோன்றும்
தளிர்க்கர அபயம் தோன்றும்

11 ராகம் : புன்னாகவராளி

தொகையறா

வேலனாகி வேடனாகி
விருத்தனாகி வள்ளியையே
வேழமுகன் அருளாலே
வதுவை செய்தாய்!
கோலவள்ளி தந்த தேனும்
கொண்ட தினை மாவருந்தி
குலவு காதல் இன்னும்
தீரலையோ?
ஆலகா லன்மகனே!
ஆறுமு காகுகனே!
அலக்ஷியம் செய்வதும்
உனக்க ழகோ?
ஆலரசு புளித்தருசேர்
அழகான கப்புதூவூர்
வேலவனே கந்தனே
அருள்தா ராயோ?

★ ★ ★

ராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி திஸ்ரம்

கண்ணிகள்

1 நாகம் வந்தே படம் விரித்து
நளினமாக ஆடும்
தோகைவிரித் தாடும் மயில்
நாகலயத் திற்காடும்
தேகமெல்லாம் சிலிர்க்க வைக்கும்
தெய்வீகம் திகழும்
திருமுருகன் காட்டுக் கந்தன்
கப்புதூவூர்க் கோயில்.

★ ★ ★

2 கோயில் வாயில் பக்தர் கூடிக்
கந்தன் புகழ் பாடும்
தூக்கும் மயிற் காவடிகள்
துள்ளித் துள்ளி ஆடும்
தூய பக்தர் கரங்களிலே
திருத்தாளம் ஒலிக்கும்
கோயில் மணி ஆடி ஆடிக்
குமரன் புகழ் பாடும்.

★★★

3 கற்பூரச் சட்டியேந்திக்
கந்தன் பக்தர் சூழும்
பொற்பூரும் சங்கொலியும்
பேரிகைகள் முழங்கும்
நற்புகழூர் கப்புதூவில்
நாதன் புகழ் கமழும்
அற்புதஞ்சேர் தெய்வகலை
ஆடிப்பக்தர் திகழும்.

★★★

4 திருநீற்றின் மகிமையினால்
தீராப்பிணி தீரும்
பெருமானின் அருளாலே
பேரின்பம் சேரும்
குருவான குகனருளால்
குறைகள் யாவும் போகும்
கருவான கப்புதூவூர்
காட்டுக் கந்தன் அருளால்.

★★★

## மங்களம்

12 ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

### பல்லவி

மங்களம் பாடிடுவோம் – என்றும்
எங்கள் கப்புதூரக் காட்டுக்
கந்தப் பெருமானுக்கு

### அநுபல்லவி

அங்கயற் கண்ணி வள்ளி
குஞ்சரிக்கும் மங்களம்
ஐங்கரன் சிவனுமைக்கும்
அநந்தனுக்கும் மங்களம்

### சரணம்

பைரவப் பெருமானுக்கும் பாவலன் அருணகிரி
தையல் கண்ணகிக்காலின் சிலம்பிற்கும் மங்களம்
வையகத்தில் கப்பூதூரக் காட்டிற்கும் மங்களம்
ஐயன் காட்டுக் கந்தனின் அடியார்க்கும் மங்களம்

சேவலுக்கும் மயிலுக்கும் செய்யவடி வேலவற்கும்
பாவலர் பக்தருக்கும் தாமோதரன் முன்னோர்கட்கும்
தேவசேவைகள் செய்யும் தொண்டருக்கும் பூசுரர்க்கும்
பூவுலக மாந்தருக்கும் பொலிநிறை மங்களம்.

*சுபம்*



உ
*கந்தன் துணை*

# "கரணவாய் – கப்புதூ காட்டுக் கந்தன் கீர்த்தனைகள்"

என்னும் தமிழிசைப் பாடல் நூலை பிரசுரம் செய்வதற்கோ அல்லது ஒலிப்பதிவு நாடா மூலம் இப்பாடல்களை வெளியிடுவதற்கான சகல உரிமைகளையும், கரணவாய் பழமுதிர் சோலையில் வசிக்கும் திரு. ச. தாமோதரம்பிள்ளை அவர்களுக்கு மனப்பூர்வமாக இத்தால் வழங்குகிறேன்.

இங்ஙனம்
*மகாவித்துவான்*
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்
*ஷெ நூல் ஆசிரியர்*
*இணுவில், சுன்னாகம்.*

*01.01.2002*







“ஏனப்பா சத்தம் போடுகிறாய். எல்லாவற்றுக்கும் நானிருக்கிறேன்.”

உ

# வாழ்வில் நிறைந்தனன் வள்ளல் ......
# வழித்துணையால் கலைந்தன அல்லல்

*கப்புதூ வாரணத்தின் கந்த மலரடிகள்*
*எப்பொழுது மென்னகத்தி லேயிலங்கி – யப்பதிவாழ்*
*கந்தனருட் கீர்த்திகளைக் கல்வியிலே விங்கியம்பத்*
*தந்தருளு மின்னருளைத் தான்.*

நாம் எல்லோருந் தென்கருணை யூர்வாசிகள். என் கல்விகூட அவ்வூர் மகாவித்தியாலயத்தில்தான் நடைபெற்றது. தந்தையார் என் தமக்கையார் திருமணத்தை நிறைவேற்றிய பின்னரே, முருகனருகிருந்து, அவன் பணிகளில் ஈடுபடவிரும்பினார். அவ்வபிலாஷை நிறைவேறியது. கோவிலின் தென்புறத்தே மனையொன்று – மண்வீடு – கோலப்பட்டது. 1939ல் அவ்வீட்டிற் குடிபுகுந்த தகப்பன் தோட்டவேலை, வயல்வேலை யாவற்றையும் பார்த்து வந்தார். முருகன் பணியுந் தொடர்ந்தது. நான் அக்காவுடனிருந்து படித்து வந்தேன் கருணைவாயில். கருணைவாயில் இருந்தாலும் கப்புதூ செல்வது வழக்கம். தந்தையைக் காணவும் முருகனை வணங்கவும்.

இந்நாட்களில், என் இடக்காலிற் புண் ஒன்று வந்தது. இது எனது 13வது வயதில். இது எனது நடமாட்டத்தைப் பாதித்தது. கல்வியையும் பாதித்தது. எட்டாம் வகுப்போடு என் கல்வி எட்டி நடந்துவிட்டது. என் முனைப்பு முழுவதும் முருகன் பணியில் மூழ்கிவிட்டது. இடது காற்புண் இருந்த இடந் தெரியாமற் போயிற்று. விவசாயத்திலீடுபட்டேன். காலையும் மாலையும் முருகன் வேலை வணங்குவதே என் வேலையாயிற்று. கப்புதூ முருகன் கோவில் எப்படி அமைந்திருக்க வேண்டுமென ஒரு படமும் என் உள்ளத்தில் அன்றே அமைந்து விட்டது. அம் மனக்கோவில் எம்மினக் கோவிலாகி வெகுசனக் கோவிலாகியது.

அக்காலத்தில் என் தந்தையாரே திருவிழாக்கட்குத் தலைமை தாங்கி நடத்தி வந்தார். அப்போது கப்புதூ முருகனுக்குத் தேர் இருக்கவில்லை. தேர் இழுக்க விரும்பினார் தந்தையார். அயலார் ஒருவரின் கட்டுக்கால் போட்ட மாட்டுத் தொட்டில் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதிலே தேருக்குரிய மேல் வேலைகள், அமைப்புகள் யாவுங் கமுகஞ் சலாகைகளால் அமைக்கப்பட்டன. அவ்வமைப்புப் பல வர்ணச் சேலைகளால் மூடப்பட்டது. இத்தேர் அமைப்பு பார் பல கைநீக்கி எதிரும் புதிருமாக இணைக்கப்பட்ட இரண்டு மாட்டு வண்டில்கள் மீது வைக்கப்பட்டது. இவ்வாறு நாலு சில்லுத் தேர் அமைந்தது. அதில் ஒரு பீடம், பீடத்தில் அமர்ந்து வேல் பவனி வந்தது. இது இன்றும் என் உள்ளத்திற் பசுமையாக உள்ளது. கப்புதூ முருகனுக்கோர் கவின் வண்ணத் தேர் வேண்டுமென அவனையே வேண்டினேன். அது இன்று கைகூடுகிறது. இது இப்படியிருக்க எங்கள் பெரிய தகப்பனார் "தக்கர்" 1945ஆம் ஆண்டு மறைந்தார். எமது தாயாரும் 1947ல் போயினார். அதன்பின் சிறியேன் 1952ல் திருமணஞ் செய்து கொண்டேன். கரணவாயில் தங்கி இருந்து விவசாயத்தை மேற்கொண்டேன். "கருணைவாய்" கரணவாய் என மருவியது என்பதையும் இங்கே சொல்லி வைக்க விரும்புகிறேன்.

நான் மேற்கொண்ட விவசாயம் உற்சாகத்தையும் ஊக்கத்தையுந் தந்தது. என்னுளங் குடிகொண்ட ஒரு திருமுருகன் என்னைவிட்டு நீங்கவில்லை. அவனே என் முழுத்துணையாக நின்றான். இன்றும் உள்ளான். என்றும் இருப்பான். எனினும், எம்மவர் எவருந்துணையில்லையே என என் ஏழை மனம் ஏங்கித் தவித்தது. 1955ம் ஆண்டு ஒரு நாள் ஒரு சொப்பனம்! சொப்பனத்தில் ஒரு சந்நியாசி. "எல்லாவற்றுக்கும் நானிருக்கிறேன். நீ

ஒன்றுக்குங் கவலைப்பட வேண்டாம்" எனக் கூறி மறைந்தார். அதே ஆண்டு இன்னொரு சொப்பனம். நான் கப்புதூ வெளியிற் போய்க் கொண்டிருக்கிறேன். வானத்திற் சுவாமியார் ஒருவர் கை விரித்துப் பறந்து போகிறார். அவர் "ஏனப்பா சத்தம் போடுகிறாய். எல்லாவற்றுக்கும் நானிருக்கிறேன். பயப்படாதே" என்றார். நான் அவ்வளவிற் கண்விழித்து விட்டேன்.

இக்காட்சியைக் கண்ட இரண்டாவது நாள் நடைபெற்ற சம்பவம் ஒன்று. எனது இரண்டாவது மகன் சுகாதரன். தவழும் பருவத்திருந்தான். அப்போது அவன் தவழ்ந்து தவழ்ந்து வீட்டு விறாந்தையைக் கடந்து வெளிமுற்றத்துக்கு வந்திருக்கிறான். இதை எவருமே காணவில்லை. விறாந்தை அருகாக முற்றத்தில் ஒரு பெரிய வாளி தண்ணீரோடு இருந்தது. இந்த இடையில் தாய் அலமலக்கையுற்றுப் பிள்ளையைத் தேடினார். பிள்ளை அந்த வாளியுள் தலைகீழாகக் கிடந்தான். பதறித் துடி துடித்துப் பாய்ந்து போய்த் தூக்கினேன் பிள்ளையை. ஒரு கணக் கவலையீனம் பெருந்துயர்க்கு இடமாயது. எல்லாமே முடிந்துவிட்டதென எல்லோருங்'கோ' வெனக் கதறினர். பிள்ளையின் கைவிரல் ஒன்று அசைவதாக அங்கு நின்றவருள் ஒருவர் கூறினார். எல்லோரும் அமைதியாயினர். பிள்ளைக்கு ஒற்றடங்கள் கொடுத்தனர். பிள்ளைக்கு மூச்சு வந்தது. பிள்ளை வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டது. பூரணசுகம் பெற்றது. நான் கண்ட கனவைக் கேட்டு அனைவரும் 'அற்புதம் அற்புதம்' என்று அகநெகிழ்ந்தனர்.

1960ஆம் ஆண்டுக்குள் முருகன் எனக்கு ஐந்து ஆண் குழந்தைகளைத் தந்தார். கன்னிகாதானஞ் செய்யப் பெண் குழந்தை இல்லையே என அவரையே வேண்டினேன். 1962ல் ஒரு பெண் மகவையுந் தந்தார். 1971ஆம் ஆண்டுவரை நாலு ஆண்களையும் தந்தார். அவர்களுட் கடைக்குட்டியான ஹரிஹரன் தோன்றுமுன் தொழிலிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. "முருகா! இந்தக் குடும்பப் பொறுப்பையும் பார்த்து, நான் மனதில் நினைத்த உள் பணிகளையெல்லாம் எப்படிச் செய்வேன்" என வேதனைப்பட்டுக் கொண்டு ஒரு நாள் இரவு உறங்கி விட்டேன். அன்று இரவுச் சொப்பனம்.

நான் சோளங்கன் வீதியால் போய்க் கொண்டிருக்கிறேன். வீதியருகில் பால்போலொரு வெள்ளைப் பந்தல். அங்கு எட்டிப் பார்க்கிறேன். வயோதிபச் சாமியார் ஒருவர் கிழக்கு முகமாக இருக்கிறார். "தாமோதரம்பிள்ளை! இங்கே வா" என என்னை அழைக்கிறார். இவருக்கு என் பெயர் எப்படித் தெரியும் என நினைந்து கொண்டு விபூதி வாங்கக் கைகளை நீட்டு என்று நீட்டிய கையில் எதையோ வைக்கிறார். என் கையில் தரப்பட்டது எது எனப் பார்க்கிறேன். "என் கை நிறைய வெள்ளிக் காசுகள் மின்னிப் பளபளக்கின்றன. நானும் தட்சிணையாகச் சுவாமியார் கையில் இரண்டு ரூபாவை வைக்கின்றேன்" கனவு கலைந்தது. கண் விழித்துக் கொண்டேன். இக்கனவின் பின்னர்தான் என் வாழ்க்கையில் வளங்கள் கொழிக்கத் தொடங்கின. காணி, பூமி, பணம், வாகனம் எனப்படுவதெல்லாம் என்னை வந்தடைந்தன. இது 1976ம் ஆண்டை அண்டின காலப்பகுதி.

இக்காலத்தில் ஒரு நாள் கப்புதூ முருகன் கோவில் வாசலில் நாம் எல்லோருங் கூடியிருந்தோம். கோவிலில் வாலஸ்தாபனஞ் செய்து வேண்டியவற்றை நடப்பிக்க வேண்டும் எனவுந் தீர்மானமாயிற்று. கோவில் திருப்பணி நிதி சேகரிப்புப் பட்டியல் ஒன்று தயாரானது. திருப்பணி வேலை பற்றிய விபரங்களும் முடிவாகின. இந்த ஒழுங்கு என் தமையனாரது. மூலத்தானப் பண்டிகை வேலையை நான் பொறுப்பேற்றேன். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். இன்றைய கோவில் எழுந்தது.

1972ம் ஆண்டு எனது துணைவியாருக்கு மாடு ஒன்று இடித்து விட்டது. கைமுறிந்து விட்டது. இச்சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் ஒரு சொப்பனம். கருநிறக் கள்வர்கள் எங்கள் வீட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் வள்ளம் போன்ற வாகனம் ஒன்றில் ஏற்றுகிறார்கள். நான் முருகா என

அலறுகிறேன். உடனே அந்த இடத்தில் நின்ற எவருங் காணப்படவில்லை. அந்த வள்ளம் போன்ற வாகனத்தின் முன் பாலமுருகன் காட்சி தருகிறார். செம்பவள மேனி. அரையிற் செம்பட்டு. நெஞ்சோடு ஒரு வேல். மற்ற அபயக்கரத்தோடு "ஏனப்பா கூப்பிட்டாய். உனக்கு என்ன வேண்டும்? கேள்"என்றார். "முருகா! நான் உன்னை என்றும் மறவாதிருக்க வரம் வேண்டும்" என்றேன். அபயகரத்துடன், "அப்படியே தந்தேன்" என்றார். உடனே அவர் பாதத்திற் கைவைத்தேன். றோசாப்பூப்போல் மென்மையான பாதம். அதில் என் தலையையும் வைத்து வணங்கி எழுந்தேன். உடனே கண்விழித்து விட்டேன். இது என்றும் என் நெஞ்சை விட்டகலாதுள்ளது.

கைமுறிந்த மனைவியாரை ஆஸ்பத்திரியிற் சேர்த்துவிட்டு ஹரிஹரன் சாதகக்தையும் எடுத்துக் கொண்டு அளவெட்டி வினாசித்தம்பிச் சோதிடரிடம் போனேன். ஹரிஹரன் சாதகப் பலனைக் கேட்டேன். அவர் குறிப்பைப் பார்த்துவிட்டு "எல்லாம் முடிந்து விட்ட பிறகுதான் வந்தீர்களோ?" என்றார். "ஏன் ஐயா?" என்று கேட்டேன். அவர் "தாயில்லையே" என்றார். "இல்லை ஐயா! அவருக்கு மாடொன்று இடித்துக் கை முறிந்து ஆஸ்பத்திரியில் விட்டிருக்கிறேன்" என்றேன். அப்படியென்றால "சிவலைமாடு இடித்திருந்தாற் சிவன் காத்திருப்பார் என்றார். "அப்படித்தான்" என்றேன். சிவன் வேறு, முருகன் வேறா? எல்லாம் ஒன்றுதானே!

இப்படியே எங்கட்கு எவ்விதத் துன்பமும் அணுகாதபடி முருகன் காத்துக் கொண்டிருக்கிறார். கந்தன் பெருமையைக் கப்புதூவுக்கு வந்தால் கண்டு உணர்வீர்கள். "எல்லாவற்றுக்கும் நான் இருக்கிறேன். நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே" என்றார். வேறொரு சொப்பனத்தில் ஒருநாள். 1982ம் ஆண்டு ஒருநாள் எனது மகன் பாஸ்கரன் லொறி ஓட்டிக் கொண்டு, பருத்தித்துறை இலங்கை வங்கிக்கு வடக்குப் பக்கத்திலிருந்த வெளியில் நிறுத்திவிட்டார். லொறியின் மேற்கூடாரத்தில் மின்சார வயர் முட்டியதால் பாஸ்கரன் மின் அதிர்ச்சிக்காளாய்ப் பேச்சு மூச்சற்றுப் போனதை ஒருவர் கண்டார். 'சுவிச்' இருக்குமிடத்துக்கு ஓடிச் சென்று சுவிச்சை நிற்பாட்டினார். மகன் நிலத்தில் விழுந்து விட்டார். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பூரண சுகத்தோடு வீடு திரும்பினார்.

1985ல் வேறொரு சம்பவம். எமது வீட்டிற் கொள்ளைக்கு வந்தவர்கள் எமது மூத்த மகன் கங்காதரனைக் கடத்திச் சென்று விட்டனர். என்ன நடக்குமோ? ஏது முடியுமோ? என எல்லோரும் ஏங்கிக் கொண்டிருந்தோம். இது எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டது. முருகன் முன்னின்றான். மூண்டிருண்ட பேரிடர்களெல்லாம் சூரியன் முன் திரண்ட பனி போலாயிற்று. கடத்தப்பட்ட மகன் அன்றைய தினமே விடுவிக்கப்பட்டு விட்டான்.

1995ஆம் ஆண்டு உக்கிரமான போர்க்காலம். எங்கள் வீட்டுக்கு மேலாலும் சரமாரியாக எறிகணைகள் பறந்து கொண்டிருந்தன. எனது மனத்திலும் ஒரு பதற்றம். எங்கள் விட்டு முற்பக்கத்து ஒரு மூலையில் குழந்தை முருகன் நிற்கிறார். நான் அவரைப் பார்த்தேன். அவர், "இங்கு எதுவும் நடக்காது. ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்" என்றார். நான் கண் விழித்து விட்டேன். அதன்பின் என் மனதில் ஓர் உறுதி, பயமின்மை பிறந்த விட்டது.

இன்னும் ஓர் விடயத்தையும் இங்கு நான் கூறவேண்டும். எமது வீட்டுக்கு மேற்குத் திசையில் அமைந்துள்ளது சந்நிதி. சோளங்கன் சொப்பனத்துச் சுவாமியார் பந்தலிற் கிழக்கு முகமாக இருந்து பார்த்ததும், பின் எழுந்து வடக்கு முகமாக இருந்து விபூதி தந்ததும் எல்லாம் தான் ஒருவனே என்பதை உணர்ந்துவதாம். அருணகிரிநாதர் முருகனை வேண்டியதுபோல் நானும் அவனை வேண்டிக் கேட்பது. அந்த வேண்டுதல் இது. "முருகா! எனது இறுதி மூச்சுவரை உன் சேவை செய்ய, உன் பணி செய்ய, நோய் பிணி இல்லாத திடகாத்திரத்தையும் பலத்தையுந் தா" முருகன் அதை நல்குவான். எண்ணிய எண்ணியாங்கு எய்த அருள்வான்.

தேர், தேர்முட்டியீறாகவுள்ள சகல திருப்பணிகளும் அவன் அருட்பாடுகள். எம் செயலாவதியாதொன்றுமில்லை. எல்லாம் அவன் செயல். நாமெல்லாம் அவன் கைப் பொம்மைகள். ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே! வள்ளி தேவசேனா சமேத முருகன் 2002ம் ஆண்டு வைகாசிப் பூரணைக்கு முதல்நாள் ஆறுகோணச் சித்திரத் தேரிலேறி வீதிவலம் வருகிறான். அடியார்கள் எல்லாம் திரண்டு வந்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறேன்.

*அஞ்சுமுகந் தோன்றி லாறு முகந்தோன்றும்*
*வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்*
*ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்*
*முருகாவென் றோதுவார் முன்.*

*சித்திரப் பொற் றேரேறிச் செய்ய தமிழ்முருகன்*
*இத்தரையி லாருயிருய் வெய்தவரும் - பத்திமிக*
*வாகநுணுப் பாவளையி லார்ந்திறைஞ்ச வாரீரித்*
*தேகமுற்ற நோக்கைத் தெளிந்து.*

*கப்புதூ வில்விளங்குங் காட்டுப் பதிமுருகா*
*எப்பொழுது முன்ற னிணை மலர்த்தாள் - இப்புலையேன்*
*நெஞ்சகத்தி னின்று நிலைக்க வருள்புரிவாய்*
*கெஞ்சியுனை வேண்டுகிறேன் கேள்.*

*பைந்தமிழ்ச்சீ ரோங்குநுணுப் பாவளையில் வாழ்கருணை*
*எந்தை முருக னிணையடிச்சீர் - சந்ததமும்*
*பாடி மகிழ்ந்திருக்கும் பாங்கினர்க டம்வினைக*
*ளோடியொருங் காகவொழி யும்.*

பழமுதிர்ச்சோலை ச. தாமோதரம்பிள்ளை
உடுப்பிட்டி கா. நீலகண்டன் ஆசிரியர்

உ

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

*துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்*
*நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்*
*நிஷ்டையும் கைகூடும் நிமலரருள்*
*கந்தர் சஷ்டி கவசந் தனை.*

### குறள் வெண்பா

*அமரரிடர் தீர வமரம் புரிந்த*
*குமரனடி நெஞ்சே குறி.*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க

விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே யிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க.
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கை ளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்

கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைத்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதி னிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்துற வாகவும்
உன்னைத் துகிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே

பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றிப் புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

*வேலும் மயிலும் துணை*

உ

முருகன் துணை



**கரணவாய் தெற்கு, கப்புதூ**

**நுணுப்பாவளைப் பதி**

# ஸ்ரீ முருகன் திருவூஞ்சல்

## காப்பு

சீராரும் நற்கருணை வாயூர் தெற்கில்
திகழ்கப்பு தூநுணுப்பா வளைக்கண் ஆங்கே
ஏராரும் மயிலயில்கொள் எம்பி ரானென்
றேத்துமுயர் முருகன்பால் ஊஞ்சல் பாடப்
பேராரும் விநாயகனே பிரானே தூய
பெம்மானே நின்னருளைப் பெறவே நின்றேன்
காராரும் கரிமுகவைங் கரனே வந்து
காசினியில் நிலைபெறவே காப்பு நீயே.

## நூல்

பொன்பார்ந்த நால்வேதங் கால்க ளாக
புகலரிய வேதாங்கஞ் சட்ட மாக
அன்பார்ந்த உபநிடதம் விட்ட மாக
அறிவெண்ணெண் கலையாவுங் கயிற தாக
இன்பார்ந்த ஆகமமே பலகை ஆக
எழில்மறைதேர் சிகரமதே பீட மாக
தென்பார்ந்த தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

சந்திரசூ ரியர்கவினார் கவிகை தாங்க
சாருமருத் தாலவட்டங் கவரி யோங்க
இந்திராதி தேவுகளும் வடந்தொட் டாட்ட
ஏனையவற் றைக்கணர்க ளியற்றி யோங்க
வந்தவள்ளி தெய்வானை வனப்புக் காட்டி
வளரயில்கைக் கொண்டிங்கு மகிழ்வா யூழி
செந்திருவாழ் தென்கருணைக் கப்பு தூ க்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

ஐங்கரனும் உக்கிரனும் முத்தன் தானும்
அருணகிரி கண்ணகையும் அமர்ந்தே காண
வெங்கணர வணிதம்பி ரானு மாக
வீற்றிருந்தே திருக்குளத்தின் அண்மை யாக
தங்குதிரு மால்மருகா தாங்குஞ் சேவல்
தனைக்கொடிகொள் ஆறுமுகா தரணி வாழ
திங்கடவிழ் தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

தங்குமெழில் இலங்கையிலே வடபா லாங்காய்
சரித்திரத்தின் முற்பட்ட தான மூர்த்தி
இங்குமுனம் ஒல்லாந்தர் இந்தக் கோட்டம்
இடித்திடவே அடியருளம் ஏங்கி யேங்கி
பொங்கிவரு திருக்குளத்தில் வைத்தார் பின்பு
புகழ்மருவ ஆலயமே புதுக்கித் தந்தார்
தெங்குநிரை தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

விக்கிரக மெடுக்குங்கால் சிலம்பு தோன்ற
விளங்கவைத்த வேலவனே வேண்ட மேன்மை
தக்கதெனச் சதுர்ப்புறமுந் தண்ணீர் சூழ
தாமறிந்தே சீர்க்கப்பு தீவு மென்றார்
ஒக்கதது மருவியபின் உலகம் போற்ற
ஒலிக்குமதன் நாமமதை உணர லாமோ
தெக்கதெனும் தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

ஓங்கிவளர் வேம்பரசோ டாலும் கொண்டல்
உளவியற்கை வனப்பதனால் உள்ள மார
ஈங்குவந்தே நினைத்தொழுவார் யோகம் செய்வார்
எழில்மிகுமா மயிலிலிவர் இறையே நாளும்
பாங்குவந்தே துயர்களையும் பான்மை யாகப்
பன்னிருகண் கையுமவண் பண்பாய்க் கொண்டே
தேங்கிளரும் தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

வந்தருளும் திருக்குளமும் அன்ன தான
மண்டபமும் அழகுதர வகுத்த வேலா
எந்தமதாம் துயர்களைய எனவே சோலை
யேற்றவரை யாறுபடை யேந்த லோய்நீ
பந்தமற இருநிலத்தோர் பாங்காய் வாழ
பதமளிக்கும் மகிழ்காந்த மஞ்ஞை யூர்தி
செந்தமிழ்வாழ் தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

தங்குப்பு நீர்நிலையால் நெய்த லாகும்
தாவியசீர் வயலதனால் மருத மாகும்
இங்குளசீர் தங்கியதால் எழில தாகும்
எழுந்தருளும் பரிவார மிதற்க ணாகும்
பொங்கியசீர் மிக்கவருள் தொக்க தாகும்
பூதலத்தோர்க் கருண்மாரி பொழிவ தாகும்
தெங் குளசீர் தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

ஆறுமுகம் கொண்டவனே ஆடீ ரூஞ்சல்
அப்பனும்நீ பேதமிலாய் ஆடீ ரூஞ்சல்
ஏறுமயில் வாகனனே ஆடீ ரூஞ்சல்
இச்சைகிரி யாஞானா ஆடீ ரூஞ்சல்
கூறுமயன் சிரம்புடைத்தாய் ஆடீ ரூஞ்சல்
குவலயத்தோர் தமைப்புரைப்பாய் ஆடீ ரூஞ்சல்
தேறுமருள் தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்.

பாரோங்கும் திருமுருகா ஆடீ ரூஞ்சல்
பலனோங்கும் திருவிழியாய் ஆடீ ரூஞ்சல்
ஏரோங்கும் திருமருகா ஆடீ ரூஞ்சல்
எழிலோங்கும் திருவயிலாய் ஆடீ ரூஞ்சல்
பேரோங்கும் திருதருவாய் ஆடீ ரூஞ்சல்
பெரிதோங்கும் திருமணியே ஆடீ ரூஞ்சல்
சீரோங்கும் தென்கருணைக் கப்பு தூக்கண்
திருநுணுப்பா வளைமுருகா ஆடீ ரூஞ்சல்

✳ ✳ ✳

## வாழி

கருதுமுயர் சிவசமயம் நீறும் வாழி
கண்டிகையும் ஆவினமும் காரும் வாழி
பெரிதுவளர் தளிசோலை மக்கள் வாழி
பேசுமுயர் அந்தணர்கள் வேதம் வாழி
மருதமுடன் நெய்தலமை வனப்பு வாழி
வளருதமிழ் முருகனருள் வாழி வாழி
திருதிகழத் தென்கருணைக் கப்பு தூக்கண்
திகழ்நுணுப்பா வளைவாழி வாழி மாதோ.

## எச்சரீக்கை

வருசீ ருளகுற மாதணை வரனே எச்சரீக்கை
முருகா வெனவரு மூவிரு முகனே எச்சரீக்கை
பெருமா னயிற்கர மாமயிற் பிரானே எச்சரீக்கை
திருசேர் வருநுணுப் பாவளை திறனே எச்சரீக்கை.

## பராக்கு

சீர்தங்கு மயிலேந்துஞ் செல்வா பராக்கு
செறிவழகு மயிலிவருந் தேவா பராக்கு
பார்தங்கு கலியுகத்துப் பரனே பராக்கு
பண்புவள்ளி தெய்வானை பதியே பராக்கு
ஏர்தங்கு மைங்கரனுக் கிளையோய் பராக்கு
எமதுவினை களையவரு மிறையே பராக்கு
கார்தங்கு தென்கருணைக் கப்பு தூக்கண்
காணநுணுப் பாவளைவாழ் கந்தா பராக்கு.

## லாலி

பிரணவத்தை யுரைத்தவனே லாலி சுபலாலி
பிரமனையுஞ் சிறைவைத்தோய் லாலி சுபலாலி
அரனவன்சே யானவனே லாலி சுபலாலி
ஆறுபடை கொண்டவனே லாலி சுபலாலி
தரணிபுகழ் வேலவனே லாலி சுபலாலி
தந்தனமென் மயிலோனே லாலி சுபலாலி
வரமுதவ வந்தவனே லாலி சுபலாலி
வளர்கப்பு தூமுருகா லாலி சுபலாலி.

## மங்களம்

திருதங்கு மைங்கரற்கு ஜெயமங்களம் – நல்ல
திகழ்சோதி யீசனுக்கு சுபமங்களம்
பாதாள வைர வர்க்கும்
பத்திரையின் கணவ னுக்கும்
மாதாவென் கண்ண கைக்கும்
மருதநில வேந்த னுக்கும்
நாதாவென் வடுக னுக்கும்
நல்லருணை நாத னுக்கும்
ஏதாகக் கப்பு தூவாழ்
ஏந்த லார்க்கும் மங்களம்
மங்களம் ஜெய மங்களம் – மங்களம் சுப மங்களம்.

## அருளும் பெருமாளே

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன – தனதான

சீருளதெய் வானைகுற மாதணையக் கூடுமருள்
சேரவெமை யாளுமுயர் – திறலோனே
தேசுநிறை யாரழக தீதகல வேமயிலில்
தேடுமுன மேயினிது – வருவோனே
பாருளநல் லாக்கமது பாங்குளநல் லார்வமுடன்
பாங்குமிகை யீயுமுயர் – முருகோகே
பான்மைநிறை தார்மாலை மார்பபுக ழாறுமுக
பாடுதமி ழாய்மருக – திருமாலின்

ஏருழவர் சேருபதி யார்கருணை யூர்வாழ
ஏந்தலென வேயமர்ந்த – எழிலோனே
ஏற்றநுணுப் பாவளையி லோங்குமுயர் நாதனென
ஏறுமயில் தாங்கியநல் – இளையோனே
காருமுகில் மேகமழை சோலைநிறை வானபதி
காருணிய மானவயில் – கரமாகக்
காட்சிதரும் மாட்சியுள வேலவளம் வாழ்வுயரக்
காணவிவ ணேயருளும் – பெருமாளே.

*கவிமணி வே. செல்வநாயகம்.*



ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே!

உ



அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்.



PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO - 13. TEL.: 330195.